வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.02.2022 வியாழக்கிழமை | இதழ் : 81 | பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# தடை செய்யப்பட்ட அமைப்புடன் இயங்கும் சுமந்திரன்மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## அரசின் நிகழ்ச்சி நிரலில் சுமந்திரன் இயங்குகிறார் என்று ரெலோ சாடல்



லண்டன், பெப்ரவரி 23

உலகத் தமிழர் பேரவை இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. அதனுடன் சேர்ந்து இயங்கி - இணைந்து அறிக்கை விடுகிறார் சுமந்திரன் எம்.பி., இவர் மீது இலங்கை அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில், அரசின் மறைமுக நிகழ்ச்சி நிரல் ஏதும் இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் பிரித்தானியாவுக்கான தலைவர் சாம். சம்பந்தன். 15

## நாளை இந்தியாவுக்கு பறக்கின்றார் பஸில்!



கொழும்பு, பெப். 24

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் நாளை வெள்ளிக்கிழமை இந்தியா செல்லவுள்ளனர்.

இந்தியாவில் இருந்து பெறப்படவுள்ள கடன் தொடர்பான பேச்சுகளை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே அவர்கள் இங்கு செல்கின்றனர்.

இதற்கு முன்னரும் பஸில் இந்தியா சென்று, அந்த நாட்டின் நிதி அமைச்சர் உள்ளிட்ட பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து சுயாதீனமாக விசாரணை

### சபையில் கூறினார் நீதி அமைச்சர்



கொழும்பு, பெப். 24

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகள், எவ்வித அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீனமாக இடம்பெற்று வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், தாக்குதல் நடந்த காலகட்டத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் தற்போது எதிர்க்கட்சியில் உள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன் கூட்டியே கிடைத்த புலனாய்வுத் தகவல்களை கவனத்தில் எடுத்திருந்தால், இந்தத் தாக்குதலை 15

## படைகள் தமிழின அழிப்பு செய்யவில்லை; 2010இல் எனக்கான ஆதரவே தெளிவூட்டும்!

### சபையில் சொன்னார் சரத் பொன்சேகா எம். பி.



கொழும்பு, பெப். 24

“2010ஆம் ஆண்டு தேர்தலில், ஜனாதிபதி வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிடவும் எனக்கு அதிக வாக்குகள் கிடைத்தன. இதனால், இலங்கை படையினர் தம்மை துன்புறுத்தினார்கள் - இன அழிப்பு செய்தார்கள் என்பதை வடக்கிலுள்ள மக்கள் நம்பவில்லை என்பது தெளிவாகிறது.”

இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

மேலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அம் 15

## இன்றும் நான்கரை மணிநேர மின்வெட்டுநடைமுறையாகும்!

கொழும்பு, பெப். 24

நாடு முழுவதும் இன்று வியாழக்கிழமையும் 4 மற்றும் நான்கரை மணிநேர மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்னுற்பத்தி நிலையங்களில் மின்பிறப்பாக்கிகளை இயக்க தேவையான எரிபொருள் இல்லா 15

## இலங்கையில் முதலீடு செய்ய இந்தியா தயாராகவே உள்ளது

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, பெப். 24

இலங்கையில் நிலவும் நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு உதவும் நோக்கில் இலங்கையில் முதலீடு செய்வதற்குத் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், நேற்றுத் தெரிவித்தார்.

இணையவழி கலந்துரையாடலின் போதே இந்த விடயத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிதி நெருக் 15

## அரசியல் கைதிகள் மூவர் சிறையில் உண்ணாவிரதம்!

### ஆளுநர் அலுவலகம் முன்பாக உறவுகள் ஆதரவு போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 24

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள் 3 அரசியல் கைதிகள் நேற்று காலை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன் மற்றும் பத்மநாதன் ஐங்கரன் ஆகியோரே உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம் 15



மின்தடை காரணமாக மெழுகுதிரி மற்றும் கைபேசி வெளிச்சத்தில் தேநீர் தயாரிக்கும் உணவக பணியாளர்...
இடம் - யாழ்ப்பாணம் - கல்வியங்காடு

## கொரோனாவுக்கு 31 பேர் பலி!

கொழும்பு, பெப். 24

கோவிட்-19 தொற்று காரணமாக நேற்று முன் தினம் மட்டும் 31 பேர் உயிரிழந்தனர் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 30 - 59 வயது பிரிவில் 4 ஆண்களும் 2 பெண்களுமாக 15

## கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 80 வீதமானோருக்கு வெவ்வேறு நோய்கள்

### சிகிச்சை பெறுவது கட்டாயமானது

கொழும்பு, பெப். 24

கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளானவர்களில் சுமார் 80வீதமானோர் வெவ்வேறுநோய்களால் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்று விசேட மருத்துவ நிபுணர் நந்தன திக்மதுகொட தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

கோவிட் -19 தொற்றுக்கு உள்ளானவர்களில் சுமார் 80 சதவீதமானோர் கொரோனா தொற்றுக்கு பின்னரான நோய் நிலைமை 15

## இப்படியும் நடக்கிறது!

கடந்த சில நாட்களாக சமூகவலைத்தளங்களில் பேசுபொருளாகியிருப்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு பற்றியதுதான்.

நீண்ட காலத்திற்கு பின்னர் மைதானம் நிரம்பிய சனக்கூட்டத்துடன் நடந்து முடிந்த அந்த மாநாடு இப்போது பலரின் கவனத்தையும் திருப்பியிருக்கிறது.

அண்மையில், நடந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாகாண சபைக்கு எதிரான போராட்டத்திற்கு சில நூறு பேர் வருகை தந்ததைப் பார்த்து பிரமித்துப்போயிருந்த பலரும் இப்போது வாயைப் பிளந்து கொண்டிருக்கின்றனர்.

முன்னணி அந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தபோதே, எப்படியும் சனக்கூட்டதைக் கூட்டி அதை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

சுமார் அறுபது உள்ளூராட்சி உறுப்பினர்களைக்கொண்ட கட்சி ஒன்று இவ்வாறு போராட்டத்தை நடத்துகின்றபோது, தமது ஒவ்வொரு உறுப்பினர்களையும் ஆளுக்கு பத்துப் பேரையாவது கூட்டிவாருங்கள் என்று கட்டளையிட்டாலே அறுநூறு பேர் வந்துவிடுவார்கள். அதையும்விட குறைவானவர்களே அந்த போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

பின்னர், சங்கிலியன் பூங்காவில் நடந்த கூட்டத்தில் வேடிக்கை பார்க்கவந்த கூட்டமும் சேர்ந்துகொண்டதால் அங்கு மக்கள் சற்று அதிகமாக கூடியிருந்தனர்.

அந்தப் பூங்காவில் 'இயேசு அழைக்கிறார்' கூட்டம் நடந்திருந்தாலும் மக்கள் கூடித்தான் இருப்பார்கள். ஆனால், அங்கு கூடிய கூட்டத்தைப் பார்த்து மலைத்துப்போனவர்கள் பலர். அதிகம் ஏன், நமது அரசியல் ஆய்வாளர்கள் பலரும் அதுபற்றி பிரஸ்தாபித்திருந்தனர்.

உடுப்பிட்டியில் சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு கூடிய கூட்டம் அப்படியல்ல. அவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ தேவையோடு இருப்பவர்கள். தங்கள் தேவைகள் அங்கு சென்றால் தமக்கு கிடைக்கும் என்று நம்புபவர்கள். தேவையுள்ளவர்களை இப்படி சேர்ப்பது பெரிய சாதனை அல்ல என்றவாறும் சிலர் சமூகவலைத்தளங்களில் கருத்துச் சொல்லி வருகின்றனர்.

வேறு சிலரோ, மாநாடு நடந்த மைதானத்திற்கு அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்களின் படங்களை போட்டு, அதில் அழைத்து வரப்பட்டவர்களே இவர்கள் என்று பதிவிடுகின்றனர்.

இரண்டு தரப்பு விமர்சனங்களும் உண்மைதான்.

ஆனால், அது சொல்லும் சேதி என்ன? தேவை உள்ளவர்களை சேர்ப்பது இலகுவானது என்றால், முன்னணி சொல்லும் அல்லது கூட்டமைப்பு சொல்லும் தமிழர் தேசம், அல்லது சுயாட்சி உரிமை மக்களுக்கு தேவையானது இல்லையா? ஒற்றுமையாக வாருங்கள், அதற்காக போராடுவோம் என்றால் அந்தத் தேவை மக்களுக்கு இருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள்தானே என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

அது அவர்களின் உரிமைக்கான கோரிக்கை. ஆனால், இங்கே வந்தவர்கள் தத்தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவே வந்தார்கள் என்றால், அப்படி அவர்களின் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டியது அவர்களின் தலைவர்களின் பொறுப்பு இல்லையா?

இப்படி உரிமைக் கோரிக்கையையும் தனிப்பட்ட தேவைகளையும் ஒன்றாகப் பார்ப்பதா என்றும் உங்களில் சிலர் இந்த ஊர்க்குருவியை ஏளனமாக முணுமுணுப்பதும் கேட்கின்றது.

உதாரணத்திற்கு, முன்னணியைப் பார்த்து உங்கள் தமிழ் தேசத்தை அடைவதற்கான வழிவரைபடம் என்ன என்று கேட்டால், எங்களுக்கு பாராளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். எமது பலம் அதிகரிக்கின்றபோது அதனை அடைவதற்கான வழியை காணலாம் என்பார்கள். தங்கள் அன்றாட வாழ்வுக்காக இப்படி அரச ஆதரவு அரசியல்வாதிகள் பின்னால் தமிழ் மக்கள் அணிதிரள ஆரம்பித்து விட்டால், அந்தப் பலம் இன்னும் குறையவே செய்யும்.

தமிழ் தலைமைகள், குறிப்பாக தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல் தலைமைகள் இந்த விடயத்தை சாதாரணமாகக் கடந்துசெல்ல முற்பட்டால் இவர்கள் காணாமலே போய்விடுவார்கள்.

இந்த விடயத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது, நண்பர் ஒருவரிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்தது.

'அங்கஜன் வான்களை அனுப்பி மக்களை கூட்டத்திற்கு அழைத்து வந்தார் என்கிறார்கள். அது உண்மையாகவே இருந்துவிட்டுப் போகட்டும். நான் இப்படி வான்களை தருகிறேன். தமிழ் அரசுத் தலைவரோ அல்லது அவரது கட்சியினரோ இவ்வளவு ஆட்களை அழைத்துவந்து காட்டுவார்களா? என்று என்னோடு சவால் விடுகிறான் எனது ஆபீஸ் பையன்?'

இதுதான் அந்த குறுந்தகவல். இதுவும் ஆயிரம் அர்த்தங்களைச் சொன்னது!

- ஊர்க்குருவி

# சிங்கப்பூர் கப்பலுக்கு டொலர் டீசல் இறக்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, பெப். 24

நான்கு நாட்களின் பின்னர் டொலர் விடுக்கப்பட்டமையால் சிங்கப்பூரில் இருந்து வந்த கப்பலின் டீசல் இறக்குமதி செய்யும் பணி ஆரம்பமாகியுள்ளது என்று பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் பொது முகாமையாளர் சமிந்திர அபேசேகர தெரிவித்தார்.


டீசலின் ஒரு பகுதி முத்துராஜவெலவிலும் மற்றையது கொலன்னாவையிலும் இறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை வந்த கப்பலின் பெற்றோல் இருப்பு இன்னும் கொலனாவை களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் எரிபொருளை இறக்குவதற்கு சுமார் மூன்று நாட்கள் ஆகும் எனவும் அபேசேகர தெரிவித்தார்.




இதேவேளை பெற்றோலுடன் வந்த கப்பல் ஒன்று நடுக்கடலில் நங்கூரமிட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்தக் கப்பலுக்கும் டொலர் வழங்கப்படும் என நிதிச் செயலாளர் கூறியதாகவும் அமைச்சர் கூறினார். (ஐ)



## விவேகானந்தா கலாசார பணிப்பாளர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகை

யாழ்ப்பாணம், பெப். 24

இந்தியத் தூதரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி நிவான்ட் விக்ரம் சிங் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்தார்.

இந்தச் சந்திப்பின் போது கலாநிதி நிவான்ட் விக்ரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி .சிறிசற்குணராஜா, பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இதன்போது பரஸ்பரம் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## அதிக விலைக்கு தரை ஓடுகள் முறைப்பாடு செய்ய முடியும்!

கொழும்பு, பெப். 24

அதிக விலைக்கு தரை ஓடுகள் (மாபிள்) விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நுகர்வோர் விவகார அதிகார சபையின் அவசர தொலைபேசி இலக்கமான 1977க்கு முறைப்பாடு செய்ய முடியும் என்றும் கூறினார்.

நாட்டில் தரை ஓடுகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டை சில விற்பனையாளர்களும் நிறுவனங்களும் சாதகமாக பயன்படுத்தி, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதாக, நாடு முழுவதும் நுகர்வோரிடம் முறைப்பாடுகள் வருகின்றன என்றும் கூறினார்.

இலங்கையில் உள்ள முன்னணி தரை ஓடு நிறுவனம் ஒன்றும், அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் குறித்து முறைப்பாடு அளிக்குமாறு மக்களைக் கேட்டுள்ளது. (ஐ)

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை எம்.பிக்கள் பார்வையிட அனுமதி

கொம்பு, பெப். 24

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாவனைக்கு சபாநாயகர் நேற்று அனுமதியளித்துள்ளார்.

இந்த அறிக்கையை நேற்று புதன்கிழமை சபையில் முன்வைத்து உரையாற்றிய சபாநாயகர், சாட்சியங்களுக் கமைய தயாரிக்கப்பட்ட 88 அத்தியாயங்களுடன் கூடிய அறிக்கையை பாராளுமன்ற வாசிகசாலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

சட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவில் சாட்சியப் பதிவுகள் பகிரங்கப் படுத்தப்படாத நிலையில் 88 அத்தியாயங்களை உள்ளடக் கிய முழுமையான அறிக்கை நேற்றுமுன்தினம் சபாநாய கர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 50 வீத பஸ் சேவைகள் குறைவடைந்துள்ளன

கொழும்பு, பெப். 24

எரிபொருள் பற்றாக்குறையால் 50 சதவீத பஸ் சேவைகள் குறைவடைந்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

சில பஸ்கள் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையில் இடையே நிறுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக தங்களது தொழில்துறை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக கெமுனு விஜேரத்ன மேலும் கூறினார். (அ)

Eelanadu ஈழநாடு
24.02.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பாராளுமன்ற பேச்சுக்களால்?

பாராளுமன்ற வழிமுறை ஊடாக, தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தில் பெரிதாக எதனையும் செய்துவிட முடியாதென்று, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பிருமான நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆறு கட்சிகளின் கூட்டத்தில் பேசுகின்றபோதே - அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். மேலோட்டமாக பார்தால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு பேசலாமா என்னும் கேள்வி எழலாம் - ஆனால், இலங்கையின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் இதுவரையில், எதைச் சாதிக்க முடிந்தது - என்று ஒரு கேள்வியை கேட்டால் - விக்னேஸ்வரன் கூறுவதில் எந்தவொரு தவறும் இல்லையென்னும் முடிவுக்கே வரநேரிடும்.

ஒருகாலத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் அப்புக்காத்து திறமையை, சிறீலங்காவின் பாராளுமன்றம் கண்டிருக்கின்றது. அதனை பார்த்து யாழ். மத்தியதர வர்க்கம் பெருமைப்பட்டுக் கொண்டதுமுண்டு. திறமையான பேச்சுக்களால், வட புல தமிழர்கள் படித்தவர்கள் என்னும் பெருமை நிலைநாட்டப்பட்டதாக, பலரும் எண்ணிக் கொண்டதுமுண்டு. ஆரம்பகால மிதவாதத் தலைவர்களின் வாதத் திறமை மெச்சத்தக்கதுதான். அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது - அவர் ஐந்து மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக (அன்றைய சூழலில் பாராளுமன்ற அமர்வுகள் இரவு வேளையிலும் இடம்பெறுவதுண்டு) பேசியிருக்கின்றார். அந்தப் பேச்சைக் கேட்டு, சபாநாயகரே தனது பாராட்டைத் தெரிவித்ததும் உண்டு.

பலரும் பேசி தோற்றுப் போன இடத்தில்தான், இப்போதும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் ஆங்கில புலமையை காண்பித்து கொண்டிருக்கின்றனர். சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் மற்றவர்களை விடவும் கெட்டித்தனமாகவர்கள் என்னும் அபிப்பிராயம், அவர்கள் பயன்படுத்தும் ஆங்கிலத்திலிருந்துதான் எழுகின்றது. இதில், புதிதாக தமிழ் தேசிய அரசியல் அரங்குக்குள் இணைந்திருக்கும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சிங்களத்தில் பேசுவதையும் சிலர் விந்தையாகப் பார்ப்பதுண்டு. ஆங்கிலத்தில் பேசி தோற்றுப்போன இடத்தில், சிங்களத்தில் பேசி வெல்லலாம் என்றும் சிலர் அப்பாவித்தனமாக நினைக்கக் கூடும். ஆனால், பேச்சு வன்மைகளால் சாதிக்க முடியுமென்றால், முன்னைய தலைமுறையில் வாழ்ந்தவர்கள் அனைத்தையும் சாதித்திருப்பர் ஆனால், அவர்களால் முடியவில்லை. சிங்கள இராஜதந்திரத்திற்கு முன்னால் தமிழ் அப்புக்காத்துக்கள் தோல்விடைந்ததுதான் இதுவரையான வரலாறு.

அப்புக்காத்துக்களின் தோல்வியால்தான், தமிழ் இளைஞர்கள் ஆயுத வழிமுறையை நோக்கிச் செல்ல நேர்ந்தது. அதுவும் இறுதியில் தோல்வியில்தான் முடிந்தது. சாத்வீக வழியில் தோல்வி - ஆயுதப் போராட்டத்தில் தோல்வி. இரண்டு தோல்வி அனுபவங்களின் பின்னர் மீண்டும் வேறு வழியின்றி, பாராளுமன்றத்தில் பேசுவதை கெட்டித்தனமாக நோக்க வேண்டிய கையறு நிலைக்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஆரம்பகால மிதவாத தலைவர்கள் நேர்மையானவர்கள்தான். ஜி. ஜி. பொன்னம்பலம் தவறான வழியில் சென்றுவிட்டார் - தமிழ் மக்களின் உரிமை அரசியலை நீர்த்துப் போகச் செய்துவிட்டார் - என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில்தான், எஸ். ஜே. வி. செல்வநாயகம், 1949இல், இலங்கை தமிழ் அரசு கட்சியை நிறுவினார். கட்சியின் அங்குரார்ப்பண உரையிலேயே இதனை அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், சிங்கள இராஜதந்திரத்திற்கு முன்னால் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அப்புக்காத்து ஆற்றலும் தோற்றுப் போயிருக்கின்றது. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் அப்புகாத்து ஆற்றலும் தோற்றுப் போயிருக்கின்றது.

இந்த அடிப்படையில் நோக்கினால் விக்னேஸ்வரன் அரசியலுக்கு புதியவர் என்றாலும், அவர் கூறுவது உண்மைதான். ஆனால், பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தால் அதிகம் சாதிக்க முடியாவிட்டாலும்கூட, வட, கிழக்கு தமிழ் மக்களுக்கான தேசியளவிலான குரலாக பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் மட்டுமே உண்டு. எனவே, அதனை பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஆனால், பாராளுமன்றத்தில் பேசியவுடன் தங்களின் பணி முடிந்துவிட்டதென்று எண்ணுவதில்தான் பிரச்னையுண்டு. அதற்குமப்பால் - ஓர் அரசற்ற தரப்பாக, எவ்வாறு பிராந்திய அரசியலை, உலகளாவிய அரசியலை கையாளுவதென்னும் சிந்தனை அவசியம். அதற்கு கூட்டுழைப்பு அவசியம். அதற்கென்று புலமையாளர்கள் குழுவொன்று அவசியம் (அதில் சிங்களவர்கள் ஒருபோதும் இருக்க முடியாது) 1949ஆம் ஆண்டு, தமிழ் அரசு கட்சியின் அங்குரார்ப்பண கூட்டத்தில் செல்வநாயகம் கூறியதற்கு அமைவாகவே இப்போதும் நிலைமைகள் காணப்படுகின்றன. அவர் அன்று கூறினார் - எங்களுக்கு வலிமையான நண்பர்கள் இல்லை. 73வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட - எங்களிடம் வலிமையான நண்பர்கள் இல்லை. அவ்வாறாயின் நமது தமிழ் கெட்டித்தனம் தொடர்பில் பெருமைப்பட்டுக் கொள்ள ஏதாவது இருக்கின்றதா?

# மெய்சிலிர்க்க வைக்கும் ‘மெய்நிகர்’ வாயிலாக வெளியான பயங்கரவாத தடைச் சட்ட நடைமுறைகள்!

அலசுவது இராஜதந்திரி

*ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் நான்கு நாட்களே இருக்கின்ற தறுவாயில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இலங் கையின் நிலைப்பாட்டை நியாயப் படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளார்.*

*இதுவிடயத்தில் பேராசியர் ஜீ. எல். பீரிஸ் இந்தியாவை பெரிதும் தங்கியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. ‘குற்றமுள்ள நெஞ்சே குறுகுறுக்கும்’ என்பது போல பேராசியரியர் பீரிஸ் இலங்கையை ஐ நா. மனித உரிமைகள் பேரவை நெருக்கடிகளிலிருந்து பாதுகாப்பதற்கு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.*

*அண்மையில், புதுடில்லியிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் மெய்நிகர் மூலமான சந்திப்பு ஒன்றை பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நடத்தியிருந்தார். அப்போது இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விலாவாரியாக அவர் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கிக் கூறியிருந்தார்.*

*இருந்தபோதிலும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான 46ஆவது தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்ற இலங்கை அரசு தவறியுள்ளதே இத்தடவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் எதிரொலிக்கவிருப்பதை அறியமுடிகின்றது.*

*பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தப்படவிருப்பது குறித்து விளக்கமளித்திருந்தார். அந்த விளக்கத்தை நோக்கும்போது இலங்கையில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இருந்த பயங்கரவாத தடைச் சட்டம் எவ்வளவு தூரம் பாரதூரமானதாக இருந்துள்ளதென்ற விடயம் மெய்சிலிரிக்க வைப்பதாக இருக்கின்றது.*

*இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் 43 ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டிருந்தது. வடக்கு - கிழக்கில் ஆரம்பமான ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை தடுக்கும் விதத்திலேயே பயங்கரவாத தடுப்புச் சட்டம் அறிமுகமானது.*

*பேராசிரியஜீ. எல். பீரிஸ் திருத்தத்தை எதிர்நோக்கியுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் ஏற்கனவே காணப்பட்ட அம்சங்கள் பற்றி விளக்கியபோது அவை அசுரத்தனமானவையாகவும், அவற்றால் எவ்வளவு தூரம் வடக்கு - கிழக்கு இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் தற்போது காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகள் என்று தடுத்து வைக்கப் பட்டிருப்போர் விவகாரம்கூட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கெடுபிடியை சுட்டிக் காட்டுவதாகவும் இருக்கின்றது.*

*திருத்தத்துக்கு உள்ளாகவுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் காணப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்களாவன தடுப்புக் காவல் உத்தரவுகள், தடை உத்தரவுகள் தொடர்பில் நீதிமன்ற மறுபரிசீலனையை ஏற்றுக்கொள்ளுதல்.*

*இந்தத் திருத்தம் சுட்டிக்காட்டுவது என்னவெனில் பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறையிலிருந்தபோது ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதாகி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படும்போது, நீதிபதி அந்த சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதிக்கலாம். இல்லையேல் தகுந்த ஆதாரங்கள் காணப்படாத பட்சத்தில் அந்தச் ந்தேகநபரை விடுதலை செய்யலாம். ஆனால், பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரகாரம் நீதிபதி கோருகின்ற மறுபரிசீலனையைக்கூட ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஒருவரைக் கைது செய்யும் அதிகாரிக்கு இருந்திருக்கவில்லை. இதன்காரணமாகவே எண்பதுகளிலும் அதனைத் தொடர்ந்து இன்றுவரை பயங்கரவாத தடைச் சட்டம் மிக கடுமையான முறையில் பொலிஸ் மற்றும் படை அதிகாரிகளின் மனம் போன போக்கில் கையாளப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.*

*நீதிபதியின் மறுபரிசீலனை புறக்கணிக்கப் படக்கூடியதாக இருந்தமையால் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் உட்பட வெள்ளை வான் கடத்தல் நடவடிக்கைகள்கூட கணிசமானளவில் காணப்பட்டிருந்தன.*


*நீண்டகாலமாக தடுத்து வைத்திருப்பதை தவிர்க்கும் விதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டோரின் வழக்குகளை விரைந்து முடிவுக்கு கொண்டு வருதல் மற்றைய திருத்தமாகும். இத்திருத்தத்தை நோக்கும்போது கடந்த காலங்களில் கைதான ஒருவர் காலவரையற்ற முறையில் நீதிமன்றம் முன்பாகவும் நிறுத்தப் படாது தடுத்து வைக்கப்பட்டதையும் அறிய முடிகின்றது.*

*இத்திருத்தத்தின் கீழ் ஒருவர் தடுப்புக் காவலிலுள்ள காலத்தில் சித்திரவதை செய்யப் படுவது தடுக்கப்படுகின்றது. அத்துடன், காவலிலுள்ளவர் தமது குடும்பத்தவரோடு தொடர்புகளை வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றது.*

*எனவே, இந்தத் திருத்தம் கைதாகி தடுத்து வைக்கப்பட்டோர் எவ்வளவு தூரம் சித்திரைவதைகளுக்கு உள்ளானார்கள் என்பதையும் அவர்கள் தம்மவர்களுடனான உறவாடல்களின்றி உளரீதியாக எவ்வளவு தூரம் பாதிக்கப் பட்டிருந்தார்கள் என்பதையும் அறியமுடிகின்றது.*

*மேற்குறிப்பிட்ட திருத்தங்களை பயங்கரவாத திருத்தச் சட்டத்தில் கொண்டுவரப் போவதாக இலங்கை தெரிவிக்கலாம். ஆனால், இந்தத் திருத்தங்களைவிட பயங்கரவாத தடைச்சட்டத்தினால் ஏற்பட்டுள்ள பாரதூரமான அடிப்படை மனித மீறல்கள் குறித்து எத்தகைய தீர்வுகளையும் நீதி நியாயத்தையும் இலங்கை அரசு முன்வைக்கப் போகின்றதென்பதையே ஐ. நா. மனித உரிமைகள் பேரவை எதிர்பார்த்திருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பேச்சு, செயலில் கவனமாக இருக்க வேண்டிய நாள். பெண்கள் மூலம் இன்று நன்மை ஒன்றை எதிர்பார்க்கலாம். எதிர்பாலினத்தினரிடம் கவனமாக இருக்க வேண்டும்.

**இடபம்**
பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை கிடைக்கும் குழந்தைகளுக்காக நீங்கள் படும்பாடு நற்பலன் அளிக்கும். காலையில் நல்ல செய்தி உங்களைத் தேடிவரும்.

**மிதுனம்**
வேலை தேடுவோருக்கு நல்ல செய்தி ஒன்று கிடைக்கும். நண்பர்களை சந்தித்து பழைய நினைவுகளை பேசி மகிழ்வீர்கள். சிறு மாற்றம் ஒன்று நிகழும். புகழ்பெற்றவரால் நன்மை அடைவீர்கள்.

**கடகம்**
இன்று நீங்கள் எடுக்கும் விஷயம் நிச்சயம் வெற்றி பெறும். புதிய இனங்களில் முதலீடு செய்வதை ஒத்திப் போடுவது நல்லது. உங்களின் கடின உழைப்பு மட்டுமே வெற்றியைத் தரும்.

**சிம்மம்**
ஆன்மிக சிந்தனைகள் அதிகரிக்கும். சுறுசுறுப்பான நாள். வாழ்க்கைத்துணைக்கு அலுவலகத்தில் நன்மை ஒன்று காத்திருக்கிறது. எதிர்பாராத லாபம் வரும். வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி**
உங்களின் பிடிவாதத்தால் விரயம் ஏற்படாதபடி கவனம் தேவை. குடும்பத்தினருடன் அனுசரித்து செல்வீர்கள். பேச்சினால் நன்மை வரும். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மனக்குழப்பம் தீரும்.

**துலாம்**
பொறுப்பும், அதிகாரமும் உள்ள பதவி உங்களைத் தேடி வரலாம். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். கோபம் குறையும். இன்று குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழல் நிலவும்.

**விருட்சிகம்**
சேமிப்பை அதிகரிப்பது நல்லது. நட்பு வட்டம் விரியும். பணியிடத்தில் மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். பிறருக்கு உதவி செய்து அவர்களது வாழ்த்தைப் பெறுவீர்கள்.

**தனுசு**
இன்று புதிய இனங்களில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். மற்றவர்களை அனுசரித்து சென்று மகிழ்ச்சி அடைவீர்கள். புதிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம். தாயின் அன்பை பெறுவீர்கள்.

**மகரம்**
எந்தவொரு செயல்களிலும் நேர்மையை பின்பற்றுவது நல்லது. உறவினர் இடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்பை நீக்குவீர்கள். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். நட்பால் ஆதாயம் உண்டு.

**கும்பம்**
கோயில் திருப்பணிகளில் ஈடுபடுவதால் உங்களின் புகழ் கூடும். உல்லாசப் பயணம் ஒன்றால் மகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தை பாக்கியத்திற்காக காத்திருந்தோருக்கு நற்செய்தி உண்டு.

**மீனம்**
புதிய வழியில் பணவரவு ஏற்படும். பணிச்சுமை குறையும். நண்பர்களை சந்தித்து பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். எந்தவொரு விஷயத்திலும் கவனமாக இருக்க வேண்டிய நாள்.

# தமிழக உரிமைகளை பாதுகாக்க ஸ்டாலினின் முயற்சிக்கு தேர்தல் மூலம் மக்கள் பேராதரவு

## நல்லாட்சிக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் என்கிறார் வைகோ



சென்னை, பெப். 24

தமிழகத்திற்கான உரிமைகளை பாதுகாக்க முதல்வர் ஸ்டாலின் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாட்சித் தேர்தல் வெற்றி மூலம் மக்கள் பேராதரவு அளித்துள்ளனர் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

“நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், தி.மு.க. தலைமையிலான கூட்டணி, தமிழக மக்களின் பேராதரவோடு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதற்கு முதல்வர் ஸ்டாலினின் நல்லாட்சிக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் தான் அடிப்படைக் காரணம் ஆகும்.

தமிழகத்திற்கான உரிமைகளைப் பாதுகாக்கவும், மாநில சுயாட்சிக் கோட்பாடு நிலை பெறவும் முதல்வர் ஸ்டாலின் எடுக்கும் முயற்சிகளுக்கு உள்ளாட்சித் தேர்தல் வெற்றி மூலம் தமிழக மக்கள் அளித்துள்ள பேராதரவு பறைசாற்றப்பட்டு இருக்கிறது.

தமிழ், தமிழர், தமிழகத்தின் நலனுக்காக பாடுபடும் ஸ்டாலின் மேற்கொண்டு வரும் அரசியல் பயணத்திற்கு உள்ளாட்சித் தேர்தல் வெற்றி மேலும் ஊக்கமாக அமையும். நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மகத்தான வெற்றியை ஈட்டி உள்ள திமுக தலைமையிலான கூட்டணி மக்கள் பிரதிநிதிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது பெரிய கட்சி என்று கூறுவதற்கு பா.ஜ.கவுக்கு எந்தவித தகுதியும் கிடையாது

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி



சென்னை, பெப். 24

2011 இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெற்ற இடங்களை விட, தற்போது 0.7 சதவீத இடங்களை மட்டுமே அதிகமாக பெற்ற பா.ஜ.க, மூன்றாவது பெரிய கட்சி என்று கூறுவதற்கு எந்த தகுதியும் கிடையாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக கே.எஸ். அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

“நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது. கடந்த மக்களவை, சட்டமன்றம், ஊராக உள்ளாட்சித் தேர்தல்களில் எத்தகைய பெருவெற்றியை தமிழக மக்கள் வழங்கினார்களோ, அதைவிட கூடுதலாக அமோக ஆதரவோடு வெற்றியை அளித்திருக்கிறார்கள்.

இந்த வெற்றிக்கு கடுமையாக உழைத்த தி.மு.க, காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் கடந்த 9 மாதங்களாக நடைபெற்று வருகிற மக்கள் நலன் சார்ந்த நல்லாட்சிக்கு நற்சான்றுகள் வழங்குகிற வகையில் இந்த வெற்றி அமைந்திருக்கிறது. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற பணி முழுமையான வெற்றி பெற வேண்டுமானால், உள்ளாட்சி அமைப்புகளில் அமரர் ராஜிவ் காந்தி கண்ட கனவின்படி நல்லாட்சி அமைவது அவசியமாகும்.”

# மாற்று சக்திகளின் கரங்களை வலுப்படுத்த வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது

## எஞ்சிய வாழ்க்கை தமிழக மக்களுக்குத்தான் என்கிறார் கமல்



சென்னை, பெப். 24

எஞ்சிய வாழ்க்கை தமிழக மக்களுக்குத்தான் என நான் காண்டுகளுக்கு முன் நான் அறிவித்தது வெறும் வாய் ஜாலம் இல்லை, இடைக்கால வெற்றி தோல்விகள் எங்களின் மக்கள் பணியை என்றுமே பாதித்ததில்லை. மாற்று சக்திகளின் கரங்களை வலுப்படுத்த வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறதுச என மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

“நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அதிகார பலம், பண பலம், கூட்டணி பலம், ஊடக பலம் கொண்டவர்களை எதிர்த்து தேர்தலில் போட்டியிட துணிந்த மக்கள் நீதி மய்யத்தின் வேட்பாளர்கள் அனைவருமே வெற்றியாளர்கள்தான்.

நேர்மையாக தேர்தலை எதிர்கொண்ட வேட்பாளர்களுக்கும், அவர்களுக்காக உழைத்த கட்சியின் உறுப்பினர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் போட்டியிட்ட வார்டுகளில் நீங்கள் வென்றதாகவே நினைத்து மக்கள் பணியைத் தொடருங்கள். உங்களை வெற்றி பெறச் செய்யாததை நினைத்து வருந்துமளவிற்குச் சேவையாற்றுங்கள். நாம் அரசியலுக்கு வந்தது மக்கள் பணி செய்வதற்குத்தான்.”

# திமு.க., பெற்றது செயற்கை வெற்றி; ஓபிஎஸ்

சென்னை, பெப். 24

நேர்மையான தேர்தல் நடந்திருந்தால அ.தி.மு.க., மகத்தான வெற்றி பெற்றிருக்கும் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க., வின் வெற்றி குறித்து பன்னீர்செல்வம் கூறுகையில்,“நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க., செயற்கையான வெற்றிய பெற்றிருக்கிறது. தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்த ஒன்று தான். தேர்தல் நியாயமாக நடைபெற்றிருந்தால், அதிமுக., வெற்றி பெற்றிருக்கும். நடந்து முடிந்த தேர்தலானது முழுமையாக மக்கள் எண்ணத்தின் பிரதிபலிப்பு அல்ல.

அ.தி.மு.க., தொண்டர்கள் எந்தவித தொய்வின்றி கட்சி பணியை தொடர வேண்டும். மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான ஜனநாயக ரீதியிலான வாய்ப்பு அ.தி.மு.க., விற்கு விரைவில் அமையும். மக்களின் விருப்பப்படி அ.தி.மு.க., மீண்டும் வெற்றி பெறும். இது நிச்சயம் நடக்கும்” என பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.




## அதிகாலையில் திருட்டு மணல் அகழ்வு; டிப்பரை மடக்கி பிடித்த இளைஞர்கள்

யாழ்ப்பாணம், பெப். 24
வடமராட்சி கிழக்கு ஆழிய வளைப் பகுதியில் நேற்று அதி காலை 2.00 மணியளவில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை மடக்கிப் பிடித்த இளைஞர்கள் அதனை மருதங் கேணி பொலிஸாரிடம் ஒப்ப டைத்துள்ளனர்.

நீண்ட நாட்களாக இந்தப் பகுதியில் மணல் மண் ஏற்றப் பட்டுக் கொண்டிருப்பதை அவ தானித்த கிராம இளைஞர்கள் அது தொடர்பில் ஆழியவளை கிராம சேவகர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ஊடாக பொலிஸாருக்கு அறிவித்தும் எந்தவிதமான நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை என தெரிவிக்கப்பட் டது.

இதனை அடுத்து நேற்று அதிகாலை மணல் ஏற்றிக் கொண்டிருப்பதை அவதானித்த ஆழியவளை கிராம இளைஞர் கள் அதனைச் சுற்றிவளைத்து அங்கிருந்து செல்லவிடாது தடுத்துக்கொண்டு ஆழியவளை கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு பல தடவைகள் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தியிருந்தனர்.

தொலைபேசி அழைப்புக ளுக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்காத நிலையில் மருதங் கேணிப் பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டு அவர்களிடம் வாகனத்துடன் சாரதி ஒப்ப டைக்கப்பட்டார். (அ-02)

# பிரபாகரனுக்கு ஆயுத கலாசரத்தை கற்றுக் கொடுத்தது ஜே.வி.பிதான்!

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப். 24**
**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஆயுத கலா சாரத்தை கற்றுக் கொடுத்தவர்கள் ஜே. வி.பி.யினர்தான் என்று ஐக்கிய மக்கள் சக் தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனா ரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

1971ஆம் ஆண்டு இந்த நாட் டுக்கு ஆயுத கலாசாரத்தை அறி முகம் செய்தவர்கள் யார்? ஐக் கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அத னைச் செய்யவில்லை.

இந்த ஆயுதக் கலாசாரத்தையே பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கற்றுக்கொண்டார்.

1989ஆம் ஆண்டில் ஜே. வி.பி இந்த நாட்டுக்கு மீண்டும் பாரிய அழிவை ஏற்படுத்தியது. இந்த நாட்டின் பொருளாதாரத் துக்கு பாரிய அழிவுகளைள ஏற் படுத்திய தரப்பே இந்த ஜே. வி.பியாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடு களை விடவும் இலங்கையில் பல்வேறு சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றது. எனவே ஜே.வி.பி. குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை-என்றார். (அ)

# முல்லைத்தீவில் திருட்டில் ஈடுபட்ட மூவர் யாழ்ப்பாணத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 24
முல்லைத்தீவில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் யாழ்ப் பாணத்தில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த டிசெம்பர் மாதம் முல்லைத்தீவு நகர பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரவு நேரத் தில் 20 பவுண் நகை கொள்ளை யிட்ட சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேக நபர்கள் மூவரே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி-நெல்லியடி, ஊர்காவற்துறை பகுதிகளைச் சேர்ந்த மூவரே குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேக நபர்கள் ஏற்கனவே பல குற்றச்செயல்களில் ஈடுபட் டுள்ளோர் என யாழ்ப் பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதி காரி பிரதான பொலிஸ் பரிசோ தகர் பிரான்சிஸ் தெரிவித்தார். (அ)

## கொரோனா நோயாளி யாழில் தலைமறைவு

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ்.போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர் ஒரு வர் காணாமல்போயுள்ளார் என தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம், மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 45 வயதான நபரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

காய்ச்சல் காரணமாக கடந்த 16 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த நபருக்கு அன்ரிஜென் பரி சோதனை செய்யப்பட்டபோது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

நோய் தீவிரமடைந்ததால் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அவர் மாற்றப்பட் டார். மறுநாள் 17ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசா லைக்கு அவரது மனைவி சென்று பார்த்தபோது கண வனை அங்கு காணவில்லை.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாடு செய்தார். இந்நிலை யில் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (அ)

## அம்பாந்தோட்டை விபத்தில் 11 வயது சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 24
அம்பாந்தோட்டை மீகஹஜ துர பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விபத்தில் 11 வயதுச் சிறுமி உயிரிழந்துள் ளார்.

மீகஹஜதுர நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் அதே திசையில் பயணித்த மோட் டார் சைக்கிளுடன் மோதி யதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்த சிறுமி மல்பெட்டாவ, அம்பலாந் தோட்டை பகுதியைச் சேர்ந்த என தெரிவிக்கப்படுகின்றது.

டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, பெப். 24
கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் வைத்தி யசாலையில் அனுமதிக்கப் படும் குழந்தைகளின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத் துள்ள செய்தி அறிக்கையில் தெரிவக்கையில்,

கோவிட் வைரஸ் தொற்று காரணமாக நாளாந்தம் வைத் தியசாலையில் அனுமதிக் கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிக ரித்து வருவதாக பொரளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தி யசாலை அறிவித்துள்ளது.

நாட்களில் கோவிட் தொற் றுக்கு சமனான வைரஸ் காய்ச் சல் மற்றும் டெங்கு காய்ச்சல் போன்றன பரவி வருவதனால், பெற்றோர்கள் தமது குழந்தை களின் ஆரோக்கியம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் வைத்திய சாலை பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய வலியுறுத் தினார். (அ)

# முள்ளிவாய்க்கால் கிழக்கில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் மக்களிடம் கையளிப்பு

முல்லைத்தீவு, பெப். 24
இலங்கை கடற்படையின் தொழில்நுட்பம் மற்றும் மனித வள பங்களிப்புடன் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத் துவ அமைச்சின் 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட முள்ளி வாய்க்கால் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் நிர்மாணிக்கப் பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் நேற்று முன்தினம் மக்களிடம் கைய ளிக்கப்பட்டது.

இதன்போது குறித்த குடி தண்ணீர்த் திட்டத்தின் கட்ட டத்தை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் நாடாவை வெட்டி திறந்து வைக்க, குடி தண்ணீர்த் திட்டத்தின் பெயர்ப் பலகையை கோட்டாபய கடற் படை முகாமின் கட்டளையி டும் அதிகாரி ஏ.ஏ.என். பண்டா திரைநீக்கம் செய்துவைக்க, தொடர்ந்து குடிதண்ணீர் இயந் திரத்தின் ஆழியை அழுத்தி திட்டத்தை உத்தியோகபூர் வமாக ஆரம்பித்து வைத்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர் பிரச்னையினால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் திட்டம் ஊடாக கிராமத்தில் உள்ள மக்களின் குடிதண்ணீர் பிரச்னை தீர்த்து வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், கோட்டாபய கடற்படை முகாமின் கட்ட ளையிடும் அதிகாரி ஏ.ஏ.என். பண்டா உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள், கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர், கிராம மட்ட உத்தியோகத்தர் கள், மதகுரு, சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

## உயர்தர பரீட்சை வினாத்தாள் தவறுகளால் தமிழ்மொழி மூல மாணவர்களும் பாதிப்பு!

### சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 24
உயர்தரப் பரீட்சையில், சில பரீட்சை வினாத்தாள்களில் இடம்பெற்ற சில பிழைகள் தமிழ் மொழிமூல மாணவர் களையும் பாதித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரி வித்தார்.

இந்த மாதம் 7ஆம் திகதி நடைபெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை உயிரியல் வினாத்தாள் பகுதி 01 இல் பல தவறுகள் விடப்பட் டிருந்தமை சுட்டிக்காட்டப் பட்டது.

இந்நிலையில், பல்கலைக்கழ கத்துக்கு தெரிவாகும் சந்தர்ப் பத்தை பல மாணவர்களும் இழக் கும் நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த விவகாரத்தில் கல்வியமைச் சர் உடனடியாக தலையிட வேண்டும் என பாரா ளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கை விடுத்தார். (அ)

ஈழநாடு



# எரிபொருள் இறக்குமதிக்கு நாட்டின் நிலைமை சவால்!

## சுட்டிக்காட்டுகிறார் வலுசக்தி அமைச்சர்

கொழும்பு, பெப். 24

நாட்டில் தற்போதுள்ள நிலைமை, எரிபொருள் இறக்குமதிக்கு பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டில் டீசல் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு ஆகிய விடயங்கள் தொடர்பில் நேற்று பாராளுமன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய விலை நிலவரங்களின் அடிப்படையில் எரிபொருள் இறக்குமதிக்காக மாதாந்தம் 500 மில்லியன் டொலர் நிதி செலவிடப்படுகின்றது. ஆனால், எமது மாதாந்த ஏற்றுமதி வருமானம் 10 மில்லியன் டொலராகும். அதனடிப்படையில் பார்க்கும்போது எமது வருமானத்தை விட 50 சதவீதத்துக்கும் அதிகளவான தொகை எரிபொருளுக்காக செலவிடப்படுகின்றது.

இதனால், எரிபொருள் இறக்குமதி செய்வது என்பது சவாலாக மாறியுள்ளது. உண்மையில் தற்போது எமது நாட்டில் எரிப்பொருள் தட்டுப்பாடு, மருந்து தட்டுப்பாடு என்பவற்றுக்கு அப்பால் எமது நாட்டில் வெளிநாட்டு வருமானம் மற்றும் டொலர் ஆகிவற்றுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதுவே இந்த பிரச்னைகளுக்கான பிரதான காரணமாகும்.



தற்போது எரிபொருள் இறக்குமதிக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதேவேளை, நேற்றைய தினம் இலங்கை வங்கியினூடாக டீசலுக்கும் நிதி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கப்பலிலிருந்து டீசலை தரையிறக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னுமொரு பெற்றோல் தாங்கிய கப்பல் எமது கடற்பரப்பில் இருக்கிறது. நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு தேவையான வெளிநாட்டு வருமானத்தை பெற்றுக்கொடுக்க நிதி அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தார். இந்த பிரச்னைக்கு விரைவில் தீர்வை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

நாட்டில் டீசல் தட்டுப்பாடு இருக்கிறது என்பது உண்மை. கடந்த சில வருடங்களாக வரையறுக்கப்பட்ட டீசலே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதன் காரணமாகவே தற்போது, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசலுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த முதலாம் திகதி லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருந்தது. இந்நிலையில், எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் தொடர்ச்சியான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் மறைத்து வைக்கப்பட்டது.

இறுதியாக டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதியே எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டிருந்தது. உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பட்டிருந்தாலும் இதுவரை இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. அமைச்சரவைக் கூட்டத்திலும் எரிபொருளை விலையை அதிகரிக்காமல் இருக்க தீர்மானிக்கப்பட்டது - என்றார். (அ)

# நாளாந்த எரிபொருள் பாவனை அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, பெப். 24

இலங்கையில் நாளாந்த எரிபொருள் தேவை அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் நாளாந்த எரிபொருள் தேவை தற்போது அதிகரித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும், ஒரு வாரத்துக்கு 5,500 மெற்றிக் தொன்னாக இருந்த டீசலுக்கான கேள்வி தற்போது 8,000 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளதாக அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

அதேபோல், 3,000 மெற்றிக் தொன்னாக இருந்த பெற்றோலுக்கான வாராந்த கேள்வி, 4,500 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், இது ஒரு பாரதூரமான நிலை என்று சுட்டிக்காட்டிய அவர், இதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்றும் மேலும் வலியுறுத்தினார். (அ)

# மிகைவரி சட்டமூலத்துக்கு எதிராக எதிர்க்கட்சி மனு

கொழும்பு, பெப். 24

மிகை வரி சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2,000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் குறித்த 25 சதவீத மிகை வரி தொடர்பான சட்டமூலத்துக்கு அண்மையில் அமைச்சரவை அனுமதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெற்றிகரமான தடுப்பூசித் திட்டத்தால் கொரோனா தொற்று கட்டுப்பாட்டில்!

கொழும்பு, பெப். 24

ஜனாதிபதியின் நேரடியான ஈடுபாட்டுடன் வெற்றிகரமான தடுப்பூசி இயக்கத்தின் மூலம் இலங்கையால் கோவிட் பரவுவதை கட்டுப்படுத்த முடிந்ததாக ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய்கள் மற்றும் கோவிட் நோய் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிய கோவிட் வகைகள் தோன்றி, ஊரடங்குகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் டெங்கு பரவலும் குறைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே, நாடு நீண்ட காலத்துக்கு மூடப்பட்டிருந்ததால், குப்பை சேகரிக்கும் பகுதிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தி குறைந்திருந்தது. இதனால் டெங்கு நோய் பரவல் குறைந்துள்ளது-என்றார்.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் இதுவரை 9,957 டெங்கு நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 7,702 பேர் ஜனவரி மாதத்தில் மற்றும் 2,255 பேர் பெப்ரவரியில் பதிவாகியுள்ளனர். (அ)

# பிக்குகளின் உடையில் இயங்கிய 'அல்கொய்தா' ரௌடி குழுவினர்!



கொழும்பு, பெப். 24

கொட்டதெனியாவ, பாண்டுராகொட பிரதேசத்தில் 'அல்கொய்தா குழு' என்ற பெயரில் இயங்கிய ரௌடிக் குழுவின் 3 பேர் கைது செய்யப்பட்டனர். தலைமறைவாக உள்ள மற்றவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கைதானவர்களில் இருவர் பௌத்த பிக்குகளை போல உடையணிந்து குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள்.

கொட்டதெனியாவ பிரதேசத்தை சேர்ந்த 2 சிறார்கள் அண்மையில் காணாமல்போயிருந்தனர். அவர்கள் நீர்கொழும்பில் மீட்கப்பட்டனர்.

சிறுவர்களின் தந்தை இரண்டு திருமணம் செய்தவர். அவருக்கு 9 பிள்ளைகள் என தெரிவிக்கப்படுகிறது. அந்த 9 பேரில், 4 பேரே இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில அவர்கள் வீடு புகுந்து வயோதிபத் தம்பதியொன்றை வெட்டிக் காயப் படுத்தினர்.

இந்த வீட்டில் நான்கு இளைஞர்கள் தம்மை 'அல்கொய்தா' என அடையாளப்படுத்திக் கொண்டு வாள்கள் மற்றும் பொல்லுகளை ஏந்தி கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (அ)

# மைத்திரியை கைவிட்டு வெல்கமவுடன் இணையவிருக்கிறார் ஜீவன் குமாரதுங்க



கொழும்பு, பெப். 24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஜீவன் குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான புதிய இலங்கை சுதந்திரக் கட்சியில் (நவ லங்கா நிசாத் பக்சய) இணையத் தீர்மானித்துள்ளார்.

" எனது இராஜினாமாக் கடிதம் கட்சிக்கு அனுப்பட்டுள்ளது. சுதந்திரக்கட்சியின் தற் போதைய கொள்கை சரியில்லை. சரியான நேரத்தில் உரிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது." - என்று ஜீவன் குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாட்டுக்குள்ளேயே இனி முழு சிமெந்து உற்பத்தி?



கொழும்பு, பெப். 24

நாட்டுக்குள்ளேயே முழுமை யான சிமெந்து உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிர்மாணத்துறையில் கடந்த இரண்டு வருடக்காலப் பகுதி யில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, சிமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாட்டுக்குள்ளேயே முழு மையான சிமெந்து உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் எவை யும் சந்தையில் காணப்படவில்லை. மருந்துப் பொருட்கள் தவிர்ந்த பல பொருட்களுக் கான நிர்ணய விலையை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு தேவையற்ற பயன்களை அடைய முயற்சிக்க வேண்டாம்-என்றார். (அ)



# தெனியாய பகுதியில் இரு மர்ம சுரங்கங்கள்!

கொழும்பு, பெப். 24

தெனியாய, விஹாரஹேன பிரதேசத்தில் இரண்டு சுரங்கப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஹாரஹேன - ஆரா தெனிய வீதியின் அபிவிருத்திப் பணிகளுக்காக வீதியின் இருபுறமும் கரைகள் வெட்டப்படும் போதே ஆரதெனிய சந்திக்கு அருகில் இரண்டு சுரங்கப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த சுரங்கப்பாதைகள் ஆரம்பத்தில் இரண்டு சுரங் கப்பாதைகளாக இருப்பதாகவும், சுரங்கப்பாதையின் இறுதிப்பகுதி வெளியில் தெரியவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இந்த சுரங்கப் பாதை பயணிக்கும் திசையில் வீடுகள் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சுரங்கங்கள் எப்போது கட்டப்பட்டன? அல்லது இயற்கையானதா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இதேவேளை, குறித்த சுரங்கப் பாதைகள் தொடர்பில் ஆய்வு செய்ய இதுவரை எந்த வொரு நிறுவனமும் முன்வர வில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# நிதி நெருக்கடி குறித்து பஸில் சபைக்கு தெரிவிக்காதது அநீதி!

## லக்ஷ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 24

நாட்டு நிதி நிலைவரம் தொடர்பில் நிதி அமைச்சர், பாராளுமன்றத்துக்கு தெரியப்படுத்தாமல் இருப்பது பெரும் அநீதியாகும் என்று எதிரணி பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரச நிதி அதிகாரம் என்பது பாராளுமன்றத்துக்கே இருக்கின்றது. நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு பொறுப்பு கூற கடமைப்பட்டுள்ளார்.

நாட்டில் தற்போது கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இறுதியாக டிசெம்பர் 10 ஆம் திகதியே நிதி அமைச்சர் சபையில் உரையாற்றினார். இரு மாதங்கள் ஆகின்றன. நாட்டு நிதி நிலைமை பற்றி அவர் கதைக்கவில்லை. இது பெரும் அநீதியாகும். ஊடகங்கள் வாயிலாகவே தகவல்கள் பெற வேண்டியுள்ளது. ஆக நாட்டில் என்ன நடக்கின்றது-என்றார். (அ)

# மன்னாரில் 22 நாட்களில் மட்டும் 488 கொரோனா தொற்றாளர்கள்

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் தகவல்

மன்னார், பெப். 24

மன்னார் மாவட்டத்தில் இம்மாதம் 22 நாட்களில் 488 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னாரில் தற்போது வரை 3672 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் புதிதாக 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்த்து பெப்ரவரி மாதம் தற்போது வரை 488 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் 2022 ஆம் ஆண்டு 689 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.மன்னார் மாவட்டத்தில் தற்போதுவரை 3872 கொரோனா தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 39 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதத்தின் பின்னர் டெல்டா பிறழ்வு மேலோங்கிய சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நூறு தொற்றாளர்களுக்கும் 1.1 என்ற வீதத்தில் மரணங்கள் இடம்பெற்றன.

எவ்வாறாயினும் இவ்வருடம் ஜனவரி மத்திய பகுதியின் பின்னர் ஒமைக்ரோன் பிறழ்வு மேலோங்கியதன் பின்னர் ஒவ்வொரு நூறு தொற்றாளர்களுக்கும். 6 பேர் மரணம் ஆகும் சந்தர்ப்பமாக இது குறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும் ஒமைக்ரோன் தொற்றினால் மாவட்டத்தில் 3 மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து,மேலதிக வலு வூட்டல் தடுப்பூசிகளை பெற்று தம்மை பாதுகாத்துக் கொள் ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 2 ஆவது தடுப்பூசியை பெற்றவர்களில் சுமார் 55.5 சதவீதமானவர்கள் மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை 70 தொடக்கம்,75 சதவீதமானவர்கள் செலுத்திக் கொண்டால் மாத்திரமே குறித்த தொற்றின் சங்கிலியை நாங்கள் முற்றாக முறியடிக்க முடியும்.

எனவே மக்கள் மூன்றாவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவேண்டும்.

பாடசாலை மாணவர்களில் இதுவரை 12,649 பேர் தமது முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளார்கள்.16 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 2 ஆவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை தற்போது இடம் பெற்று வருகின்றது.

தற்போது வரை மொத்தமாக 1,649 பேர் தமது 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி மகா சிவராத்திரி நிகழ்வுகள் மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெற உள்ளன.

இதற்காக வருகை தர உள்ள பக்தர்கள் கட்டாயம் பூரணமாக தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

பூரணமாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஒருவர் தனது 2 ஆவது தடுப்பூசியை பெற்று 2 வாரங்கள் கழிந்திருக்கவேண்டும்.

அத்தோடு மூன்று மாதங்களுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். தனது 2 ஆவது தடுப்பூசியை பெற்று மூன்று மாதங்களுக்கு மேற்பட்டிருந்தால் கட்டாயம் மூன்றாவது அல்லது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான பக்தர்களே குறித்த நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். எனவே திருவிழாவில் கலந்து கொள்ள உள்ளவர்கள் பூரணமான தடுப்பூசியை பெற்றுக் கொள்ள விரும்பினால் உடனடியாக அதனை பெற்றுக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# எரிபொருளை பதுக்கும் விற்பனை நிலையங்கள்

கொழும்பு, பெப். 24

நாட்டில் தற்போது எரிபொருள் தொடர்பான பிரச்னைகளுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் சில விற் பனை நிலையங்கள் எரிபொருளை மறைத்து வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

இதன்படி, எரிபொருளை மறைத்துவைத்து விற்பனை செய்யும் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் சோதனைகளை மேற்கொள்வதற்காக பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளை மறைத்து வைத்துக்கொண்டு, நுகர்வோருக்கு வழங்காதுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் தலைவர், சுமித் விஜயசிங்க குறிப்பிட்டார்.

# முத்துராஜவெல பாதுகாப்புக்காக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, பெப். 24

முத்துராஜவெல ஈரநிலத்தை பாதுகாப்பதற்கு 100 மில்லியன் ரூபாவை வழங்க சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

6,236 ஹெக்ரேயர்பரப்பளவை கொண்டுள்ள முத்து ராஜவெல ஈரநிலத்தை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டம் அண்மையில் ஆரம்பிக் கப்பட்டது.

இந்த நிலையில் இந்த ஆண்டுக்கான பாதீட்டில் சுற்றாடல் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபாவில் 100 மில்லியன் ரூபாவை முத்து ராஜவெல ஈரநிலத்தை பாதுகாப்பதற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# கோட்டா-ரணில் இரகசிய பேச்சா? மறுக்கிறது ஐக்கிய தேசியக்கட்சி

கொழும்பு, பெப். 24

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இரகசிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக வெளியாகி வரும் தகவல்களை ஐக்கிய தேசியக்கட்சி மறுத்துள்ளது.

எனினும் தேர்தல் கூட்டணி ஒன்று தொடர்பான செய்தி தொடர்பில் அந்த கட்சி மறுப்பு எதனையும் வெளியிடவில்லை.

ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் இதற்கு ரணிலின் மருமகளான இஷானி விக்கிரமசிங்க, உதவி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் தகவல் வழங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி தரப்பு, இஷானி விக்கிரமசிங்கவின் ஊடாக இரகசிய பேச்சுக்கள் எவையும் இடம் பெறவில்லை என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோர், ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கூட்டணி ஒன்றை, அமைப்பதற்கான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற தகவல் பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கூட்டணி தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் சம்பிக்க ரணவக்க தொடர்பு கொண்டபோதும் அவர் உரிய பதில்களை வழங்காத நிலையில் இந்த கூட்டணி தொடர்பான முன்னெடுப்புக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# தமிழ்த் தேச அங்கீகாரமும் தனியரசுக் கோரிக்கையும்: ஈழத்தமிழரது அடையாள மாற்றம்!

கே.ரி.கணேசலிங்கம்

பொதுவெளியில் ஈழத்தமிழர் தொடர்பில் தனிநாட்டுக் கோரிக்கைக் கும் தேச அங்கீகாரத் திற்கும் இடையில் புரிதலின்றிய உரையாடல்கள் மேலெழு கின்றன. ஈழத்தமிழரது அரசியலின் வளர்ச்சிக் கட்டத்தை (Evolution) இனங் காணத் தவறும் எல்லாச் சந்தர்ப்பத்தி லும் அத்தகைய தவறுகள் ஏற்பட முனை கின்றன. ஈழத்தமிழரது இன்றைய இருப் பானது பல நூற்றாண்டுகளாக தமிழர்க ளின் மூதாதையர் ஏற்படுத்திய அரசியல் சமூக வாழ்வியலின் தொடர்ச்சி என்பதை மறுக்க முடியாது. இது தமிழினத்தின் இயங்கியலின் ஒருகட்டமேயாகும். மொழி மதம் பண்பாட்டு அடையாளங் கள் மற்றும் பொருளாதார இருப்பின் நியமமே இன்றைய வடிவமாகும்.

தேசியத்தின் பிறப்பென்பது 18 ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய சிந்தனையாக இருந்தாலும் மனித குலம் அதனை பூகோளமயப்படுத்தியுள்ளது. அது சமானியர்களின் யுகமாகவே கட்டமைக் கப்பட்டது. முடியாட்சி முறைமைக ளுக்கு எதிராக மக்களது திரட்சியே அத்தகைய தேசியத்தின் தோற்றமாகும். இன மத நிற சாதிய வேறுபாடுகளைக் கடந்து மக்களது திரட்சியே தேசியம் என்று சுருக்கமாக கூறிக்கொள்ளலாம். மக்கள் அரசியல் தீர்மானங்களில் பங்கெடுக்கும் ஜனநாயக ஈடுபாடு இல்லையாயின் அதனை தேசியம் எனக்குறிப்பிட முடியாது. மக்கள் தமக்குரிய விருப்புக்களை தீர்மானமாக எடுத்துக் கொள்வதே அவர்களது சுய உரிமையாகும். அதுவே சுயநிர்ணய உரிமையாகும். ஒரு சுயம் பிறருக்கு தீங்கில்லாத தன்னகத்தே சுயமாகச் செயல்படுவதும் சுயம் இன்னோர் சுயத்துடன் பரஸ்பரம் நலனடிப்படை யில் ஒன்று சேருவதும் ஜனநாயகத்திற் கான அடிப்படைகளேயாகும். ஜனநாயம் என்பது உயிர்துடிப்புள்ள பண்பாட்டு அடையாளம். அது நாகரீகத்தின் முதிர்ச்சி.

ஈழத்ததமிழர் மன்னராட்சிக்குள் இருந்து விடுபட வழிவகுத்த பிரித்தா னிய ஆதிக்கவாதம் தனது நிர்வாக நலனுக்காக ஒன்றையாட்சி மரபுக்குள் ஒன்றிணைத்தது. இலங்கைத்தீவின் பிரிதானிய அரசியலமைப்பால் கட்டப் பட்ட ஒன்றையாட்சி நியமத்திற்குள் ஈழத்தமிழர்கள் வலிந்து பிணைக் கப்பட்டார்கள். ஆனாலும் அவர்களது வாழ்விடமும் மொழியும் பண்பாட்டு அடையாளங்களும் அங்கீகரிக்கப்பட்டி ருந்தது. அதனை சுதந்திர இலங்கைக்குள் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக் குள்ளேயே தந்தை செல்வா சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தார். அது மட்டுமன்றி தந்தை செல்வாவுக்கு முன்பே ஆறுமுக நாவலரும் சேர் பொன் இராமநாதன் மற்றும் அருணாசலம் போன்றவர்கள் அதற்கான ஆரம்பப் புள்ளியை ஏற்படுத்திவிட்டார்கள். அதி லும் நாவலரும் அருணாச்சலமும் தமிழ்த் தேச அங்கீகாரத்திற்கான மொழி மத அடையாளங்களுடன் பண்பாட்டச் சேர்க்கையை முதன்மைப்படுத்தி தமிழ்த் தேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்தி னார்கள். இவர்களது பங்களிப்பிலிருந்து மேலும் முன்னேறிய தந்தை செல்வ நாயகம் அவர்கள் இரண்டு பிரதான விடயங்களை முன்மொழிந்தார்.

ஒன்று சமஷ்டிக் கோரிக்கை. சமஷ்டிக் கோரிக்கை என்பது வெளித் தேற்றத் தில் தமிழ் தேச அங்கீகாரம் போன்று அமைந்திருந்தாலும் அதன் உள்ளார்ந்த அர்த்தம் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணயத்தை கொண்டது. அமெரிக் காவின் அனுபவத்தை வைத்துக் கொண்டு நோக்கும் போது பிரிந்து செல்லவிடாது அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு பல தேசங்கள் ஒன்றிணைந்து இயங்குவதென்று குறிப்பிட்டாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக உல கம் முன்வைத்த ஒருவிடயமாக சமஷ்டி



கருதப்படுகிறது.

லெனின் தலைமையிலான சோவியத் ரஷ்யாவின் சமஷ்டியானது அத்தகைய அர்த்தத்திலேயே இயங்கியது. அது ஸ்டாலின் யுகத்தில் தலைகீழானது வேறுவிடயம். அதாவது சுயநிர்ணயம் என்பது ஒரு தேசிய இனமானது தனக் கென சுயாதிபத்தியமுள்ள ஓர் அரசை அமைப்பது. அல்லது ஓர் அரசமைப்பி லிருந்து பிரிந்து தனியரசை அமைப்பது அல்லது அவ்வாறு பிரிந்து இன்னோர் அரசுடன் இணைந்து கொள்வது அல்லது தனியரசாக இருக்கும் ஓரரசு இன்னோர் அரசுடன் இணைவது எனக் கொள்ளப்படுகிறது. இன்னோர் அர்த்தத் தில் சுயநிர்ணயம் ஆனது ஓர் அரசின் இறைமை இன்னோர் அரசினால் மீறப் படாது அல்லது தலையிடாது இருத்த லாகும். அந்த வகைக்குள் பார்த்தால் சமஷ்டி சுயநிர்ணயத்தின் பால்பட்ட தென்பது தெளிவாகிறது.

இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம். இது தந்தை செல்வாவின் தலைமையில் ஈழத்தமிழரது தனியரச மைப்பதற்கான தீர்க்கமான வெளிபாடே வட்டுக் கோட்டைத் தீர்மானமாகும். அதாவது சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட அதே தரப்பே தனியரசுக்காக பிரிந்து செல்லும் தீர்மா னத்தை தமிழ் மக்களிடம் முன்வைத்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டது. 1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை கம்யூனிசக் கட்சி தமிழர்கள் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையை உடைய வர்கள் என்பதை பிரகடனப்படுத்திய 35 வருடங்களுக்க பின்னர் வட்டுக்கோட் டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதிலிருந்தே மூன்றாவது கட்டம் ஈழத்தமிழரது அரசியல் பரப்பில் மேலெழுகின்றது. அத்தகைய கட்டத்தை ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அனைத்தும் மேற்கொண்டன. அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் தனித்துவ மாக கொண்டு செயல்பட்டனர்.

வட்டுக் கோட்டைத் தீர்மானம் மிதவாத சக்திகளால் முன்வைக்கப்பட்ட போது ஈழத் தமிழர்கள் வளர்ச்சி பெற்ற ஒரு தேசிய இனமாக வரலாற்றில் நிலை நிறுத்தப்பட்டதுடன் அதற்கான வர லாற்று இருப்பையும் மொழியையும் பண்பாட்டையும் பொருளாதாரத்தை யும் கொண்டவர்கள் என்பதை இலங் கைத் தீவு மட்டுமல்ல உலகமே ஏற்றுக் கொண்டது.

இதன் அடுத்த கட்டமே தனியரசுக் கான போராட்டமாகும். மிதவாதம் தீர்மானங்களை முன்வைத்து அகிம்சை ரீதியில் போராடியத. ஆனால் இளைஞர் கள் பிரிந்து செல்வதற்கான ஆயுதப் போராட்டத்தை செயல்பூர்வமாக ஆக்குவதில் முனைப்புக் காட்டினர். அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தனியரசொன்றையே நிர்வகித்தார்கள். அதாவது பலமான ஆயுதப்படைகளைக் கொண்ட விடுதலைப் புலிகள் தனித்து தனியரசுக்கான ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்தியதோடு ஓர் அரசை கட்டமைத் தார்கள்.

முப்படைகளையும் கொண்ட அரச இயந்திரத்தை நிறுவியது மட்டுமல்லாது அத்தகைய அரசுக்கான சட்டவாக்கம் நிர்வாக இயந்திரம் நீதிக்கட்டமைப்பு என்பவற்றை நிறுவினர் அது மட்டுமன்றி இறைமை கொண்ட அரசுக்கான நியமங் களாக கடலிலும் தரையிலும் ஆகாயத்தி லும் எல்லை வகுத்து அதில் வாழும் மக்களது உரிமைகளையும் சட்ட ஒழுங் கையும் பொருளாதார வாய்ப்புக்களை யும் சமத்துவத்தையும் பாதுகாப்பதில் கவனம் கொண்டனர். ஆயிரம் விமர்ச னம் இருந்தாலும் விடுதலைப் புலிகள் ஓரசைக் கட்டமைத்து அதன் நிர்வாக அமைப்பையும் தேசிய இருப்பையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினர். அதாவது தனியரசுக்காக பிரிந்து செல்லும் போராட்டத்தையும் அதற்குரிய தனியரசையும் சமதளத்தில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அமுல்படுத்தி வந்தனர்.

2009 களுக்கு பின்னர் அத்தகைய நிலை முற்றாகவே தலைகீழானது. மீளவும் தனியரசை அமைத்து நிர்வாக கட்டுப்பாட்டுக்குள் இயங்கிய மக்கள் இலங்கைத் தேசியத்துக்குள் உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக ஈழத்தமிழர்கள் தேசியமாக இல்லை என்றோ பிரிந்து செல்வதற்கான தனியரசை கோரவில்லையென்றே அல்லது அதற்கு தலைமை தாங்கிய தலைமைகளும் அமைப்புகளும் தனியரசைக் கோரவில்லையென்றே வாதிக்க முடியாது. ஈழத்தமிழர்கள் ஓர் அரசியல் சமூகமாக தம்மை தக்கவைப் பதில் கரிசனையுடனேயே இயங்குகிறார். அது ஈழத்தமிழரது வரலாற்றில் ஒரு காலப்பகுதி நியமம். அதனை நிராகரிக்க வோ திரிபடுத்தவோ முடியாது. வரலாறு வரலாறாகவே உச்சரிக்கப்பட வேண்டும். எத்தகைய உன்னதமான இலட்சியமானா லும் செயல்பூர்வமான வடிவத்தை அது கொண்டிருக்க வேண்டும். அத்தகைய வாய்ப்புக்களை கொண்டிருக்கவில்லை எனின் இறுதியில் அது எதிர்கணியமான பயனையே அளிக்கும். அதனால் எதி ரியே அதிக நன்மைய வாய்ப்பு ஏற்படும்.

- அருவி

“

**எத்தகைய உன்னதமான இலட்சியமானாலும் செயல்பூர்வமான வடிவத்தை அது கொண்டிருக்க வேண்டும். அத்தகைய வாய்ப்புக்களை கொண்டிருக்கவில்லை எனின் இறுதியில் அது எதிர்கணியமான பயனையே அளிக்கும். அதனால் எதிரியே அதிக நன்மைய வாய்ப்பு ஏற்படும்.**

# ரஷ்யா - உக்ரைன் போர் வெடித்தால் ஆசியாவில் ஏற்படும் பாதிப்புகள்...



எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ரஷ்யா, உக்ரைன்மீது போர் தொடுக்கலாம்' என்பதைத்தான் அங்கிருந்து வந்து கொண்டிருக்கும் செய்திகள் சொல்கின் றன. ரஷ்ய நாட்டுத் தளபதிகள் உக்ரைன் எல்லையில், தங்கள் நாட்டுப் படை, பரிவாரங்களுடன் ஜனாதிபதி புடின்னின் கட்டளைக்காகக் கண் விழித்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உக்ரைனிலிருக்கும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படைகள், உக்ரைனின் எல்லையோரப் பகுதிகளில் தாக்குதல்களைத் தொடங்கிவிட்டார்கள். அதனால், அங்கு போர்ப் பதற்றம் அதிகரித்திருக்கிறது. ரஷ்யா - உக்ரைன் போர் நடந்தால், தெற்காசியாவில், குறிப்பாக இந்தியாவுக்கு என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்?

**உக்ரைனில் வசிக்கும் இந்தியர்கள்!**

உக்ரைனில் 20,000-க்கும் அதிகமான இந்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் வேலை நிமித்தமாகவும், பலர் படிப்புக்காகவும் உக்ரைனில் வசித்துவருகிறார்கள். இந்திய மாணவர்களில் மருத்துவம் படிக்க, பலரும் தேர்வுசெய்யும் நாடுகளில் உக்ரைன் முக்கிய இடத்தில் இருக்கிறது. இந்தியர்கள் மட்டுமன்றி இலங்கையர்களும் மருத்துவப் படிப்புக்க தெரிவு செய்யும் முதுலாவது வெளிநாடாக இருப்பது உக்ரைன்தான்.

ரஷ்யா - உக்ரைன் இடையே போர் தொடங்கிவிட்டால், உக்ரைனிலிருக்கும் இந்தியர்களை மீட்டெடுப்பதுதான் இந்தியாவுக்கு முதல் சவால். போருக்குப் பின்னர் உக்ரைன் எந்த நிலைமைக்குச் செல்லும் என்பது தெரியாது. எனவே, அங்கு படித்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்படலாம்!

**நிலக்கரி, கச்சா எண்ணெய்!**

இந்தியா தனது மின்சாரத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள, பெருமளவு நம்பியிருப்பது நிலக்கரியைத்தான். வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் மொத்த நிலக்கரியில் ரஷ்யாவிடமிருந்து ஆண்டுதோறும் சுமார் 1.5% அளவு நிலக்கரியை இந்தியா இறக்குமதி செய்கிறது. கடந்த 2021ஆம் ஆண்டில், 1.8 மில்லியன் டன் நிலக்கரியை இந்தியா இறக்குமதி செய்திருந்தது. ஏற்கெனவே நிலக்கரித் தட்டுப்பாடு நிலவிவரும் சூழலில், ரஷ்யாவில் போர் நடந்தால் இந்தியாவின் நிலக்கரித் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் அபாயம் இருக்கிறது!

2021இல் ரஷ்யாவிலிருந்து 43,400 பேரல் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்திருக்கிறது இந்தியா. இது இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் 1% மட்டுமே. அதேபோல, ஆண்டுக்கு 0.2% அளவிலான இயற்கை எரிவாயுவையும் இந்தியா ரஷ்யாவிடமிருந்து வாங்கிவருகிறது. கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு இரண்டையும் மிகக் குறைந்த அளவிலேயே ரஷ்யாவிடமிருந்து இந்தியா பெறுவதால், இந்த வியங்களில் இந்தியா எளிதாகச் சமாளித்துக் கொள்ள முடியும் எனச் சொல்லப்படுகிறது.

**மறைமுகப் பிரச்னைகள்!**

நேரடிப் பிரச்னைகள் போக, சில மறைமுகப் பிரச்னைகளையும் ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக இந்தியா எதிர்கொள்ளவேண்டியிருக்கும். தற்போதுவரை இந்த விவகாரத்தில் பொதுவான கருத்துகளை மட்டுமே இந்தியா பதிவுசெய்துவருகிறது. ஒருவேளை போர் நடந்தால், உக்ரைனுக்கு எதிராக இருக்கும் ரஷ்யாவின் பக்கமோ, உக்ரைனுக்கு ஆதரவாக இருக்கும் அமெரிக்காவின் பக்கமோ நிற்கவேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்படும்.

போர் விவகாரத்தில், எந்த நாடு செய்தது சரி என்பதை ஐ.நா-வில் பதிவுசெய்யவேண்டிய நிலை ஏற்படும். ரஷ்யா, அமெரிக்கா என இரு நாடுகளுடனும் நட்புறவிலிருக்கும் இந்தியா, ஏதாவது ஒரு நாட்டின் பக்கம் நின்றால், இன்னொரு நாட்டின் பகையைச் சம்பாதிக்க நேரிடும்.

2016ஆம் ஆண்டுக்குப் பிறகு, ரஷ்யாவுடனான உறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவருகிறது இந்தியா. இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்களில், சுமார் 50 சதவிகிதம் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைதான். குறிப்பாக, இந்திய விமானப்படையிலிருக்கும் போர் விமானங்களில், 70 சதவிகித விமா னங்கள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை அல்லது ரஷ்யாவின் உதவியோடு தயாரிக்கப்பட்டவை.

**போர் விவகாரத்தில், எந்த நாடு செய்தது சரி என்பதை ஐ.நா-வில் பதிவுசெய்யவேண்டிய நிலை ஏற்படும். ரஷ்யா, அமெரிக்கா என இரு நாடுகளுடனும் நட்புறவிலிருக்கும் இந்தியா, ஏதாவது ஒரு நாட்டின் பக்கம் நின்றால், இன்னொரு நாட்டின் பகையைச் சம்பாதிக்க நேரிடும்.**

மறுபுறம், சீன ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கிய ஏருயுனு அமைப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது இந்தியா. சீனாவை எதிர்கொள்வதற்கு அமெரிக்காவின் உதவி இந்தியாவுக்கு அவசியப்படுகிறது. எனவே, இந்த இரண்டு நாடுகளில் ஒரு நாட்டைப் பகைத்துக்கொண்டாலும் இந்தியாவுக்குச் சிக்கல்தான்!

**சீனாவுக்கு லாபம்!**

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும், “உக்ரைன்மீது போர் தொடுத்தால், ரஷ்யாமீது பொருளாதாரத் தடை விதிப்போம்!’ என்றிருக்

நா.வருண்

கின்றன. அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பொருளாதாரத் தடை விதிக்கும் பட்சத்தில், ரஷ்யா இயல்பாகவே சீனாவின் உதவியை நாடிச்செல்லும் வாய்ப்பிருக்கிறது.

அமெரிக்காவைப் பொது எதிரியாகக் கருதும் சீனாவும் ரஷ்யாவும் ஒன்று சேர்ந்தால் இந்தியா, அமெரிக்கா என இரு நாடுகளுக்கும் அது தலைவலியாகவே அமையும். அதுமட்டுமல்லாமல், சீனா மீது மட்டுமே அதிக கவனம் செலுத்திவந்த அமெரிக்கா, ரஷ்யாமீது அதிக கவனம் செலுத்தவேண்டிய நிலை ஏற்படும். அப்படியான சூழல் அமைந்தால், சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த தொடங்கப்பட்ட QUAD அமைப்பு நீர்த்துப்போகும். சீனாவுக்கு இது சாதகமாகவே அமையும்.

“ரஷ்யா - சீனா நட்புறவு வலுப்பெற்றால், பெருமளவு ரஷ்யாவின் பாதுகாப்புத் தளவாடங்களைப் பயன்படுத்திவரும் இந்தியாவின் பாதுகாப்புக்கு சிறிய அளவிலாவது அச்சுறுத்தல் ஏற்படலாம்” என்கிறார்கள் பாதுகாப்பு வல்லுநர்கள். இந்தப் பிரச்னைகளையெல்லாம் எப்படிச் சமாளிக்கப்போகிறது இந்தியா?

**ரஷ்யாவுக்கு எதிரான தடைகள்**

திங்களன்று யுக்ரேன் பிரிவினைவாதப் பகுதிகளுக்கு ரஷ்யா தனது படைகளை அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான தடைகளை விதித்து வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நார்டு ஸ்ட்ரீம் -2 எனும் முக்கிய எரிவாயு குழாய்க்கு வழங்கிய ஒப்புதலை ஜெர்மனி நிறுத்தி வைத்துள்ளது.

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அருகே உள்ள கடலோரப் பகுதியில் இருந்து ஜெர்மனியின் லப்மின் வரை பால்டிக் கடலுக்கு கீழே 1200 கிலோ மீட்டர் நீளத்துக்கு இந்த எரிவாயு குழாய் அமைந்துள்ளது.

ரஷ்ய அரசு மற்றும் மேற்கத்திய எரிவாயு நிறுவனங்கள் ஆகியவற்றால் கூட்டாக அமைக்கப்பட்டுள்ள இந்த எரிவாயுக் குழாய் ரஷ்யாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எரிவாயுவை சுமந்து செல்ல அமைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இதற்கான பணிகள் முழுமையடைந்தாலும் இன்னும் எரிவாயு கொண்டு செல்லப்படுவது தொடங்கப்படவில்லை. இந்நிலையிலேயே இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதை ஜெர்மனி ரத்து செய்துள்ளது.

நார்டு ஸ்ட்ரீம் என்ற முதல் எரிவாயு குழாய் 2011ஆம் ஆண்டு முதல் இயக்கத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.





# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

- **பின்வரும் அட்டவணையை நன்றாக அவதானித்து 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**
  கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் ஐந்து வீரர்கள் மூன்று சுற்று விளையாடிய விதம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| சுற்றுக்கள் | லவன் | லக்சன் | நிமல் | நிரஞ்சன் | கமல் |
|---|---|---|---|---|---|
| 1ம் சுற்று | ○ | ◉ | ◉ | ⊗ | ⊗ |
| 2ம் சுற்று | ◉ | ⊗ | ◉ | ◉ | ◉ |
| 3ம் சுற்று | ○ | ○ | ◉ | ○ | ◉ |

மிகநன்று ◉ ஓரளவு நன்று ○ குறைவு ⊗

39) மூன்று சுற்றுக்களிலும் மிக நன்றாக விளையாடியவர் யார்?
(1) லவன் (2) நிமல் (3) லக்சன்

40) முதல் சுற்றில் விளையாடியதை விட 2ஆம் சுற்றில் மிகத் திறமையாக விளையாடாதவர் யார்?
(1) கமல் (2) நிமல் (3) லக்கன்

- **பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்**

01) புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக் கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை.
பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

i) வாத்து எங்கே முட்டைகள் இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது?
..........................................................................................

ii) வினை அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக.
..........................................................................................

iii) பொழுது போக்க மற்றவர்களுடன் பேசும் பேச்சு எவ்வாறு அழைக்கப்படும்?
..........................................................................................

iv) பந்தியில் கூறப்பட்ட நீர்நிலையின் பெயரை எழுதுக.
..........................................................................................

v) அ∴றிணைப் படர்க்கை பன்மை இறந்த கால வினைச் சொல் ஒன்றினை எழுதுக.
..........................................................................................

vi) “ஐதான” என்பதைக் குறிக்கும் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
..........................................................................................

02) **அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**
(1) ஓடுகின்றார்கள். (2) மேய்ந்தன. (3) பறக்கின்றன.

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**
எங்களால் / அம்சங்களை / காலி / நுழைந்ததுமே / இரண்டு / நகருக்குள் / காணமுடிந்தது.
..........................................................................................

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**
i) யானைக் கூட்டம் நீர் அருந்தின. (  )
ii) பறவைகள் வானத்தில் பறக்கும் (  )
iii) அம்மாவுடன் தங்கை கோயிலுக்குச் சென்றார்கள் (  )

05) **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**
டெங்குநுளம்பாரே நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா

## விடைகள்

01) i) ஏரிக்கரையில் இருந்த புதர்களில்
ii) சுகமாக
iii) அரட்டை
iv) ஏரி
v) நீந்திக் கொண்டிருந்தன.
vi) அடர்ந்த
02) பறக்கின்றன
03) காலி நகருக்குள் நுழைந்ததுமே இரண்டு அம்சங்களை எங்களால் காணமுடிந்தது.
04) i) ×
ii) ✓
iii) ×
05) டெங்குநுளம்பாரே, நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா?

39) 2
40) 3

கல்வி tv CHANNEL-1

**17.02.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**17.02.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருமலை பொது மயானத்துக்கும் உரிமை கொண்டாடும் பௌத்தம்!

திருகோணமலை, பெப். 24

**திருகோணமலை நகரசபை எல்லைக்குள் உள்ள நகராட்சி மன்றத்தினால் பராமரிக்கப்படும் பொது மயானத்தில் “பௌத்த மயானம்” எனும் பெயப்பலகை வைக்கப்பட்டுள்ளது.**

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் அமைந்துள்ள இந்து மயானத்திற்கு அருகில் உள்ள இப்பொதுமயானத்திலேயே புதிய பெயர்ப்பலகை போடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நகரசபை தலைவரிடம் வினவியபோது, கடந்த வாரம் ஐந்து புத்த துறவிகளும், திருகோணமலை சிற்றிசன் அமைப்பின் பிரதிநிதிகள் தமிழ் உறுப்பினர் அடங்கலாக நகர சபைக்கு வருகை தந்து குறித்த மயானத்தை பௌத்த மயானம் ஆக்குமாறு கோரி விண்ணப்பம்




அளித்தனர். அது தொடர்பாக சபை மறுப்புத் தெரிவித்ததுடன் பொதுமயானமாகவே இருக்கவேண்டும் எனத் தீர்மானித்தாகவும் கூறினார்.

திருகோணமலை நகரத்தில், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மயானங்கள் இருக்கின்றது, பாரமரிக்கப்படுகின்றது. எனவே குறித்த பொது மயானத்தை தற்போது சிங்கள - பௌத்தர்கள் மட்டுமே பாவனை செய்வதால் இது பௌத்த மயானமாக இருத்தல் பொருத்தமானது எனும் வாதமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எதுவாயினும், நகர சபையின் பராமரிப்பில் உள்ள ஓர் இடத்தில் அத்துமீறி இந்தப் பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது குற்றம். எனவே இதற்கான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நகர சபைத் தலைவர் தெரிவித்தார். (ஐ)

## ஓட்டமாவடியில் 3586 சடலங்கள் நல்லடக்கம்!

ஓட்டமாவடி, பெப். 24

ஓட்டமாவடியில் கொரேனா தொற்றால் மரணித்து அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 586ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்கள் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் மேலும் 5 பேரின் சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, 4 இஸ்லாமியர்கள், ஒரு பௌத்தரின் சடலங்களே அடக்கம் செய்யப்பட்டன.

இதையடுத்து அங்கு இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள கோவிட்-19 தொற்றால் இறந்தவர்களின் சடங்களின் எண்ணிக்கை 3586 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## நவீன முன்பள்ளி நிந்தவூரில் திறப்பு



நிந்தவூர், பெப். 24

அம்பாறை- நிந்தவூர் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன முறையிலான முன்பள்ளி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதே சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹீர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். மணிவண்ணன் பிரதம அதிதியாக கலந்து முன்பள்ளியைத் திறந்து வைத்தார்.

உள்ளூராட்சி மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ் 69 இலட்சத்து 34ஆயிரத்து 526 நிதி ஒதுக்கீட்டில் முன்பள்ளியின் முதற்கட்ட வேலை நிறைவடைந்துள்ளது.

விழாவில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ)

## போதையில் கடலில் குளித்த இளைஞரை காணவில்லை!

நிந்தவூர், பெப். 24

நண்பருடன் சேர்ந்து மது அருந்திவிட்டு கடலில் நீராடிய இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நிந்தவூர் - அட்டைப்பள்ளம் கடற்கரையில் கடந்த திங்கட்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும், இதுவரை இளைஞர் மீட்கப்படவில்லை என்று அறிய வருகின்றது.

காணாமல்போன இளைஞர் தனது நண்பருடன் சேர்ந்து மது அருந்திய நிலையில் கடலில் நீராடினார் என்றும் அப்போதே அவர் காணாமல் போனார் என்றும் கூறப்படுகின்றது.

இளைஞரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## நடமாடும் மருத்துவ சேவையை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை

அக்கரைப்பற்று, பெப். 24

அம்பாறை - பொத்துவில் - செங்காமம் மீள் குடியேற்ற கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்து, நடமாடும் மருத்துவ சேவையை மீள ஆரம்பிக்கவுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ், நேற்றுத் தெரிவித்தார்.

இந்த சுகாதார நிலையத்தை புனரமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஸாரப், தனது வரவு - செலவுத் திட்ட நிதியிருந்து 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வாரத்தில் இரண்டு நாள்கள் நடமாடும் சேவை ஊடாக வெளிநோயாளர் சிகிச்சை நடைபெறும் என்றும் கர்ப்பவதி தாய்மார்களுக்கான கிளினிக் மற்றும் சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் என்பன தொடர்ந்து நடைபெறுமெனவும் தெரிவித்தார்.

மீள் குடியேற்றக் கிராமத்தில் அமைந்துள்ள சுகாதார நிலையத்தை புனரமைத்து வைத்திய சேவையை அரம்பிக்குமாறு, தொடர்ச்சியாக பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கஞ்சா விற்பனை செய்த கடை உரிமையாளர் கைது!

ஏறாவூர், பெப். 24

ஏறாவூர் பிரதேசத்தில் பலசரக்கு கடை ஒன்றில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கடை முதலாளி ஒருவரை, கேரளா கஞ்சாவுடன் திங்கட்கிழமை இரவு கைது செய்துள்னர் என்று மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தெரிவித்தார்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஏறாவூர் முதலாம் பிரிவிலுள்ள குறித்த பலசரக்கு கடையை முற்றுகையிட்டனர்.

இதன்போது கடை முதலாளி, தனது இடுப்பு பகுதியில் மறைத்து வைத்திருந்த 1,700 கிராம் கேரளா கஞ்சாவை கைப்பற்றியதுடன் அவரை கைது செய்தனர்.

கைதானவர் 53 வயதுடையவர் எனவும் இவர் நீண்ட காலமாக கடையில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சிறந்த முயற்சியாளராக ஜெயராசா தெரிவானார்

மட்டக்களப்பு, பெப். 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த முயற்சியாண்மையாளராக உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் சா.ஜெயராஜா, கிழக்கு மாகாண ஆளுநரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு, மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில், திங்கட்கிழமை நடைபெற்றது.

விவசாய பிரதி பணிப்பாளர் வி. பேரின்பராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத், கௌரவ அதிதிகளாக




கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ. கே.ஜி.முத்துவண்டா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே. கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக சேதனப் பசளை விவசாயத்தை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும் என கிழக்கு மாகாண ஆளுநர் இதன் போது தெரிவித்தார். (ஐ)

# எரிவாயு குழாய் திட்டத்தை உடன் நிறுத்தியது ஜேர்மனி!

## ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டனும் ரஷ்யா மீது தடை!



பேர்ளின், பெப். 24

ரஷ்யாவின் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவை தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளன.

ரஷ்யாவிலிருந்து எரிவாயு கொண்டு வருவதற்காக செயல்படுத்தப்படவிருந்த நோர்ட் ஸ்ட்ரீம் 2 எரிவாயு குழாய் திட்டத்தை இடை நிறுத்துவதாக ஜேர்மனி அரசு அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் கிழக்கில் உள்ள மிகப்பெரிய எரிவாயு வளத்தில் 40 வீத அளவை ஐரோப்பாவுக்கு ரஷ்யா வழங்கி வருகிறது.

ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய் 1,225 கி.மீ .(760-மைல்) தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ளது. இதனை அமைக்க 05 வருடங்கள் எடுத்தன. இதற்கான மொத்த செலவு 11 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

ஜேர்மனிக்கு ரஷ்யாவின் எரிவாயு ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும் வகையில் இக்குழாய் நிறுவப்பட்டுள்ளது.

எனினும் இந்த குழாய்மூலம் எரிவாயு கொண்டு செல்லும் திட்டம் இதுவரை செயற்படத் தொடங்கவில்லை. இந்நிலையிலேயே இத்திட்டத்தை இடைநிறுத்துவதாக ஜேர்மனி அறிவித்துள்ளது.

பிரிட்டனில் உள்ள ஐந்து ரஷ்ய வங்கிகளின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அறிவித்தார்.

அத்துடன், மூன்று ரஷ்ய பெரும் கோடீஸ்வரர்கள், பிரிட்டன் விதித்துள்ள பயணத் தடைகளால் பாதிக்கப்படுபவர்கள் என்றும் அவர் கூறினார். பாராளுமன்றில் அவர் ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளை அறிவித்தபோது, சில எம்.பிக்கள் இந்த நடவடிக்கை போதுமானதாக இல்லை என்று வாதிட்டனர். ஆனால் இந்த கட்டுப்பாடுகள் விரிவடையலாம் என்று போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு எதிரான முதலாவது நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. இதில் உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய பாராளுமன்ற முடிவை அங்கீகரித்த அந்நாட்டு எம்.பிக்களை இலக்கு வைக்கும் நடவடிக்கை, ரஷ்ய வங்கிகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிச் சந்தைகளுக்கான அணுகலுக்கு தடை விதிப்பது போன்றவை அடங்கும். (அ)



## உக்ரைனில் கற்கும் வெளிநாட்டு மாணவர்கள் பெரும் குழப்பத்தில்!

### அரைவாசிப் பங்கினர் இந்தியர்கள்

கிவி, பெப். 24

உக்ரைன் நாட்டின் பல்கலைக் கழகங்களில் குறிப்பாக மருத்துவக் கல்லூரிகளில் கற்கின்ற வெளிநாட்டு மாணவர்களில் அரைவாசிப் பங்கினர் இந்தியர்கள். அவர்களில் பாதிப் பேர் மருத்துவ மாணவர்கள் ஆவர். அங்கு சுமார் இருபது இலங்கை மாணவர்களும் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர்.

இந்தியப் பல்கலைக் கழகங்களில் மருத்துவப் படிப்புக்கான அனுமதி பெறுவது மிகக் கடினமானதும் நிதிச் செலவு மிக்கதும் என்பதால் இந்திய மாணவர்கள் அதிகமானோர் உக்ரைன் மருத்துவப் பல்கலைக்கழகங்களை நாடுகின்றனர்.

ரஷ்யா தாக்கக் கூடும் என்ற பயத்தில் உக்ரைனில் இருந்து வெளிநாட்டவர்கள் வெளியேறிவருவதால் மாணவர்களும் தங்கள் நாடுகளுக்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கீவில் உள்ள இந்தியத் தூதரகம் மாணவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ஆயினும் அங்கு பல்கலைக் கழகங்கள் இன்னமும் இயங்கி வருகின்றன.அதனால் மாணவர்களது நிலைமை குழப்பத்தில் உள்ளது. இடையில் வெளியேறிச் செல்லும் மாணவர்கள் இணைய வழியில் கற்றல் செயற்பாடுகளைத் தொடர்வதற்கான வசதிகளைச் செய்வதற்குப் பல்கலைக்கழகங்கள் பின்னடிப்பதாகக் கூறப்படுகிறது. அதனால் தங்கள் உயர் கல்வி இடைநடுவில் குழம்பிவிடலாம் என்று வெளிநாட்டு மாணவர்கள் கவலையடைந்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட இருபதாயிரம் பேரை அங்கிருந்து அழைத்துவருவதற்கான விமான சேவைகளை புதுடில்லி ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை அரசு அங்குள்ள தனது பிரஜைகள் சுமார் நாற்பது பேரையும் துருக்கியில் உள்ள அதன் தூதரகத்தோடு தொடர்புகளைப் பேணி வருமாறு அறிவுறுத்தி உள்ளது. இலங்கை மாணவர்களில் ஆறு பேர் ஏற்கனவே கொழும்பு திரும்பியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவுடன் எல்லையைக் கொண்டுள்ள பெலாரஸ் உட்பட வேறு சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இலங்கை, இந்திய மாணவர்கள் உயர்கல்வி பெற்றுவருகின்றனர்.

இதேவேளை, ரஷ்யா, உக்ரைனின் கிழக்கில் கிளர்ச்சியாளர்களது கட்டுப்பாட்டில் உள்ள பிராந்தியங்களைச் சுதந்திர நாடுகளாக அங்கீகரித்திருப்பதை இந்தியா வெளிப்படையாகக் கண்டிக்கவில்லை எனத் தகவல் வெளியாகியிருக்கிறது. ரஷ்ய அதிபரது செயலைக் கண்டிப்பதற்காக நேற்று இரவோடு இரவாகக் கூட்டப்பட்ட ஐ. நா. பாதுகாப்புச் சபையின் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதி ரி. எஸ். திருமூர்த்தி- ரஷ்யா - உக்ரைன் எல்லை நிலைவரம் தொடர்பில் இந்தியாவின் கவலையை மட்டுமே தனது வாசகத்தில் வெளியிட்டாரே தவிர ரஷ்யாவைப் பெயர் குறிப்பிட்டுக் கண்டனம் செய்வதைத் தவிர்த்துக் கொண்டார். (அ)



## மியன்மாரின் இராணுவ ஆட்சி மீதான தடையை நீடித்த ஐரோப்பிய ஒன்றியம்!

பிரஸ்ஸல்ஸ், பெப். 24

மியன்மாரின் இராணுவ ஆட்சி மீதான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்துள்ளது.


மியன்மாரில் மனித உரிமை மீறல் குறித்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 22 அதிகாரிகளின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு பயணத் தடையும் விதிக்கப் பட்டுள்ளது.

ரோஹிங்யா இனத்தினர் மீதான வன்முறைகள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தில் நடப்பிலுள்ள விசாரணையை மேலும் துரிதப்படுத்தும் விதத்தில் தடையுத்தரவுகள் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் குறித்த குற்றச்சாட்டுகளை மியன்மாரின் இராணுவ அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. அத்துடன், விசாரணையைத் தள்ளுபடி செய்யுமாறும் இராணுவ அரசாங்க பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

எனினும் ரொஹிங்யா இன ஆர்வலர்கள் விசாரணை தொடரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (அ)

### உக்ரைன் விவகாரம் தொடர்பில்

## மேற்கு நாடுகளுடன் பேச்சுக்கு இப்போதும் புடின் தயாராம்!



மொஸ்கோ, பெப். 24

உக்ரைன் விவகாரத்துக்கான தீர்வு தொடர்பில் மேற்கு நாடுகளுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை நடத்த ரஷ்யா இன்னும் தயா ராக இருப்பதாக ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

எனினும் ரஷ்யாவின் நலன் கள் மற்றும் ரஷ்யர்களின் பாதுகாப்பு விடங்களில் எந்த வித சமரசங்களுக்கும் இட மில்லை எனவும் அவர் குறிப் பிட்டார்.

ரஷ்யாவின் பாதர்லாண்ட் தினத்தை ஒட்டி நேற்று பேசிய அவர், “நேர்மையான உரையாடலுக்கு” எப்போதும் ரஷ்யா தயாராகவே உள்ளதாகக் கூறினார்.

ரஷ்ய ஆயுதப் படைகளின் போர் தயார் நிலையை பாராட்டிய அவர், நாட்டின் தேசிய நலன்களை உறுதி செய்வதில் அவர்களின் அர்ப்பணிப்பை பாராட்டினார்.

உக்ரைனின் எல்லைகளுக்கு அருகில் சுமார் 190,000 வரையான ரஷ்ய துருப்புக்கள் உள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. கடந்த 24 மணி நேரத்துக்குள் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள் உக்ரைன் எல்லை அருகே பெருமளவு துருப்புக்கள், மற்றும் ஆயுத தளபாடங்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளமையை உறுதி செய்துள்ளன. மேலும் 100 க்கும் மேற்பட்ட கனரக இராணுவ வாகனங்கள் உக்ரைனின் எல்லைக்கு அருகில் உள்ள பெலாரஸ் விமான நிலையத்தில் இருப்பதாக அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனமான மாக்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவில் தங்கச் சுரங்க வெடி விபத்தில் 60 பேர் மரணம்!



ஓவாஹடோகு, பெப். 24

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவின் தென்மேற்கு பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில், தற்காலிக தங்கச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடி விபத்தில் சுமார் 60 பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்தனர்.

தங்கச் சுரங்கத்தில் வைத்திருந்த வெடிபொருட்கள் திடீரென வெடித்துச் சிதறியதே இந்த துயர சம்பவத்துக்கு காரணம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புர்கினா பாசோ ஆபிரிக்காவின் மிகப்பெரிய தங்க உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். இந்த நாட்டில் உள்ள பல சுரங்கங்கள் சர்வதேச நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டில் புர்கினா பாசோ 54 தொன் தங்கத்தை உற்பத்தி செய்தது. 2019 இல் இங்கு 45 தொன்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் இது 20 வீதம் அதிகரித்துள்ளது என்று சுரங்கங்கள் மற்றும் குவாரிகளுக்குப் பொறுப்பான அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் மொத்த உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு அங்கீகரிக்கப் படாத சுரங்கங்களில் இருந்து சந்தைக்கு வருகிறது. தங்கச் சுரங்க தொழில் மூலம் சுமார் 1.5 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். இந்நிலையில் பல ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள முறைசாரா சுரங்கங்களில் இவ்வாறான கொடூர விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. கடந்த மாதம், அண்டை நாடான கானாவில் தங்கச் சுரங்கத்திற்கு வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 13 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டார் ஓப்பன் ரென்னிஸ் இகா, சபலென்காவெற்றி!



கட்டார், பெப். 24

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் போலந்தின் இகா ஸ்வியாரெக், பெலாரஸின் சபலென்கா, கிரீஸின் மரியா சக்காரி ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

கட்டாரில் ஏ.ரி.பி. ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது சுற்று ஆட்டத்தில் போலந்தின் இகா சுவிற்சர்லாந்தின் கோலுபிக்கை எதிர் கொண்டார்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் முதல் செற்றை 6 - 2 என்ற கணக்கில் வென்ற இகா, இரண்டாவது செற்றை 3 -6 என்ற கணக்கில் தோற்றார். எனினும், மூன்றாவது சுற்றில் 6 -2 என்ற கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் பெலாரஸின் சபலென்கா பிரான்ஸின் கோனெட்டை எதிர்கொண்டார். இதில் 6- 2, 6-2 என்ற கணக்கில் சபலென்கா இலகு வெற்றி பெற்றார். மற்றொரு போட்டியில் கிரீஸின் மரியா சக்காரி அமெரிக்காவின் லீயை எதிர் கொண்டார். இந்தப் போட்டியை 6 -3 , 6-3 என்ற செற்களில் வென்றார் சக்காரி. (ஐ)



# கௌடலஜரா ஓப்பன் ரென்னிஸ் விலகினார் பிரிட்டனின் எம்மா!

கௌடலஜரா, பெப். 24

கௌடலஜரா ஓப்பன் ரென்னிஸ் தொடரில் விறுவிறுப்பாக நடந்த போட்டியில் பிரிட்டனின் எம்மா ரடுகானு காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினார்.

3 மணித்தியாலம் 36 நிமிடங்கள் நீடித்த இந்தப் போட்டி உலக ரென்னிஸில் மிக நீண்ட போட்டிகளில் ஒன்றாக மாறியது.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் சம்பியனான எம்மா, அவுஸ்திரேலிய ஓப்பனில் தோல்வியடைந்தார். இதன்பின்னர் மெக்சிக்கோவின் கௌடலஜரா தொடரில் விளையாடுகிறார்.

இதில், 5-7, 7 - 6 (7-4) 4-3 என்ற செற் கணக்கில் முன்னிலையில் இருந்த நிலையில் எம்மா இடுப்பில் காயமடைந்தார். ஆனால், மருத்துவ ஓய்வு பெற்றுக் கொண்டு அவர் விளையாட முயன்றபோதும் தொடர்ச்சியாக அவரால் விளையாட முடியாமல் போகவே அவர் போட்டியிலிருந்து விலகினார். (ஐ)




# இந்தியாவுடனான தொடர் வாய்ப்பிழந்தார் ஹசரங்க

கொழும்பு, பெப். 24

இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க இந்தியாவுக்கு எதிரான இருபது - 20 தொடரில் விளையாடும் வாய்ப்பை இழந்துள்ளார். அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் கோவிட்-19 தொற்றுக்குள்ளான ஹசரங்க, அதிலிருந்து குணமடை யாததால் இந்தியாவுடனான மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடும் வாய்ப்பை இழந்துள்ளார்.

கோவிட்-19 தொற்று கண்டறியப்பட்ட நிலையில் முன்னதாக ஹசரங்க அவுஸ்திரேலியாவுடனான இறுதி மூன்று இருபது - 20 போட்டிகளிலும் விளையாடவில்லை. அவரின் 7 நாள் கட்டாய தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்த போதிலும், அண்மையில் அவருக்கு மீண்டும் மேற்கொள்ளப்பட்ட கோவிட் சோத னையும் வைரஸ் தொற்றுக்கு சாதகமான முடிவை வெளிப்படுத்தியுள்ளது.

இதனால் அவர் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியே முடியாத நிலைமையில் உள்ளார். இதனால் இன்று தொடங்கும் இந்தியாவுக்கு எதிரான இருபது - 20 தொடரில் அவரால் பங்கேற்க முடியாது.

தேசிய அணியின் நம்பர் வன் சுழல்பந்து வீச்சாளராக வனிந்து ஹசரங்க இருப்பதால், இது இலங்கை அணிக்கு பெரும் இழப்பாகும்.

# மத்தியூஸ், திரமன்னே அணிக்கு திரும்பினர்!

கொழும்பு, பெப். 24

தனிப்பட்ட காரணங்களுக்காக சில காலமாக கிரிக்கெட் விளையாடாமலிருந்த அஞ்சலோ மத்தியூஸ், முன்வரிசை துடுப்பாட்ட வீரரான லஹிரு திரிமன்னே ஆகியோர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணிக்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர, போட்டித் தடையிலிருந்து மீண்டு வந்த நிரோஷன் டிக்வெல்லவும், சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை பெற்றிராத அஷெய்ன் டானியல் ஆகியோரும் டெஸ்ட் அணியில் இடம்பெறவுள்ளனர்.

அனுபவ வீரரான மத்தியூஸ், இதுவரை 92 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 11 சதங்கள், 37 அரைச்சதங்கள் அடங்கலாக 6,338 ஓட்டங்களை குவித்துள்ளார். லஹிரு திரிமன்னே 42 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 3 சதங்கள், 10 அரைச்சதங்களுடன் 2,063 ஓட்டங்களை குவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது சுகாதார கட்டுப்பாட்டு விதிகளை மீறிய குற்றச்சாட்டில் போட்டித் தடையிலிருந்து மீண்டு வந்த நிரோஷன் டிக்வெல்லவுக்கு சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட மீண்டும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையின் இளம் சுழற்பந்துவீச்சாளரான ரமேஷ் மெண்டிஸ் உபாதைக்குள்ளாகியுள்ளதால், அண்மைக் காலமாக உள்ளூர் முதல்தர போட்டிகளில் சிறப்பான ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்த அஷெய்ன் டானியலுக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிரான இருபதுக்கு 20 அணியிலும் அஷெய்ன் டேனியல் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரட்ண, உப தலைவர் தனஞ்சய டி சில்வா மற்றும் சுரங்க லக்மால் ஆகிய மூவரும் தற்போது 7 நாட்கள் கொண்ட உயிர் குமிழி தனிமைப்படுத்தலில் உள்ளனர். இந்த தனிமைப்படுத்தல் நடவடிக்கை முடிந்ததும், அவர்கள் இந்தியா நோக்கி புறப்பட்டுச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியினர் தற்போது இந்தியாவில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)









# ஐக்கிய அரபு இராச்சியம், அயர்லாந்து ரி-20 உலகக் கிண்ணத்துக்கு தகுதி!

டுபாய், பெப். 24

ஐக்கிய அரபு இராச்சியம், அயர்லாந்து ஆகிய அணிகள் செவ்வாயன்று ஓமனில் நடந்த அரையிறுதி போட்டிகளில் வெற்றி பெற்று 2022 ஐ. சி. சி.யின் இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

இதேநேரத்தில் கனடா மற்றும் பஹ்ரைன் பிளே- ஓவ்களில் வெற்றிகளைப் பதிவு செய்தன. 2022 இருபது -20 உலகக் கிண்ண போட்டிகளில் அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் 16 - நவம்பர் 13 வரை இடம்பெறும்.

அவுஸ்திரேலியா முழுவதும் உள்ள ஆறு மைதானங்களில் போட்டிகள் நடைபெறும் அரையிறுதி போட்டிகள் சிட்னி மற்றும் அடிலெய்டு ஓவல் மைதானத்திலும், இறுதிப் போட்டி மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்திலும் நடைபெறும்.

நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியா ஏற்கனவே தொடருக்கு தகுதி பெற்றுள்ளது, அதேநேரத்தில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் தென்னா பிரிக்கா ஆகிய அணிகளும் தரவரி சைக்கு அமைவாக தகுதி பெற்றுள்ளன.

இந் நிலையிலேயே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளும் தொடரில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

# பரீட்சை நேரத்தில் மின்வெட்டை தவிர்ப்பதற்காக பேச்சுவார்த்தை

கொழும்பு, பெப். 24

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது மின்வெட்டை தவிர்ப்பது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் கல்வி அமைச்சு, மின்சார சபை மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியோருடன் நேற்றுமுன்தினம் இரவு கலந்துரையாடல் இடம்பெற்றதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார். (அ)

# அலி சப்ரியின் யோசனைகளுக்கு சக அமைச்சர்கள் கடும் எதிர்ப்பு!

## ரணகளமாகியது அமைச்சரவை

கொழும்பு, பெப். 24

**நாட்டில் இஸ்லாமியர்கள் நீண்டகாலம் பின்பற்றும் சட்ட திட்டங்களில் செய்யக்கூடிய வகையிலான திருத்தங்களை முன்மொழிந்த நீதியமைச்சர் அலி சப்ரியின் பத்திரமொன்றுக்கு அமைச்சரவையில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவையின் கூட்டம் கடந்த திங்கள் நடந்தது.

கடந்த ஆண்டு முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்ட சீர்த்திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கிய நிலையில், அவற்றில் செய்யக்கூடியவற்றை விளக்கிய அமைச்சரவைப் பத்திரமொன்றை நீதியமைச்சர் இதன் போது சமர்ப்பித்திருந்தார். சட்ட ரீதியான திருமணங்களுக்கான வயதெல்லையை 18 வருடங்களாக உயர்த்துதல், திருமணப் பதிவு ஆவணத்தில் மணப்பெண் கையெழுத்திடுவதை கட்டாயமாக்குதல், பலதார திருமணங்களை இல்லாதொழித்தல் மற்றும் காதி நீதிமன்ற முறைமையை அகற்றுதல் ஆகிய விடயங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென முன்னதாக வலியுறுத்தப்பட்டிருந்தன.

அவற்றில் பலதார திருமணங்கள், காதி நீதிமன்ற முறைமை ஆகியவற்றை நீக்கினால் முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் சர்ச்சைகள் ஏற்படலாமென அமைச்சரவையில் தெரிவித்த நீதியமைச்சர், செய்யக்கூடிய திருத்தங்களை அமைச்சரவையில் முன்மொழிந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

ஆனால், நீதியமைச்சரின் இந்த கோரிக்கைக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கடும் கண்டனத்தை வெளியிட்டதுடன், இஸ்லாமியர்களுக்கென தனிச்சட்டம் இலங்கையில் இல்லையென்று ஆவேசமாக தெரிவித்தார்.

முகத்தை மூடி ஆடை அணிவதை தடை செய்வது குறித்து பிரான்ஸில் கணக்கெடுப்பு ஒன்றை நடத்தினார்கள். அதில் அதற்கு அதிகபட்ச ஆதரவு கிடைத்தது. இங்கேயும் ஒரு சிலர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக அந்த சட்டங்களில் சீர்திருத்தம் செய்யாமல் இருக்க முடியாது. பலதார திருமணங்களை அனுமதிக்கவே முடியாது. இஸ்லாமியர்கள் இந்த நாட்டின் பொதுவான சட்டத்தை பின்பற்ற வேண்டும். பல தரப்புகளுக்காக பல சட்டங்கள் இருக்க முடியாது என்று அமைச்சர் சரத் வீரசேகர இங்கு குறிப்பிட்டார்.

இதனையடுத்து, அமைச்சரவையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் சிபாரிசுகள் கிடைத்த பின்னர் தேவையான திருத்தங்களை செய்யலாமென அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில இங்கு தெரிவித்தனர்.

முஸ்லிம்களின் கலை, கலாசாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டத் திருத்தங்களை செய்வதில் தவறில்லையென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இங்கு குறிப்பிட்டார்.

சர்ச்சைகளையடுத்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் சிபாரிசுகள் கிடைத்த பின்னர் இதில் திருத்தங்களை செய்யலாமென தெரிவித்துள்ளார். (அ)

# இரண்டு பஸ்கள் மோதி விபத்து; ஹொரணையில் 23 பேர் காயம்

கொழும்பு, பெப். 24

ஹொரணை - கொழும்பு பிரதான வீதியில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸும், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

இதில் 23 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களில் ஆண்கள் மூவர் அடங்குவதாகவும் பொலிஸார் கூறினர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் பயணித்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் வேதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கஹதுடுவ ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்,

ஹொரணையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின், பின்புறம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதில் ஆடைத் தொழிற் சாலை பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டதுடன், விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# 37,500 மெற்றிக் தொன் டீசலை விடுவிக்க பணம் வழங்கப்பட்டது

கொழும்பு, பெப். 24

சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சொந்தமான கப்பலில் கொண்டு வரப்பட்ட 37,500 மெற்றிக் தொன் டீசலை விடுவிப்பதற்காக எரிசக்தி அமைச்சு பணம் செலுத்தியுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் இரவு 35.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.அதனடிப்படையில் குறித்த டீசல் தொகை விரைவில் தரையிறக்கப்படும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# தொழில்வாய்ப்பு பெற்றுக்கொடுக்க இணையவழியில் தொழில் சந்தை!

## முல்லைத்தீவு மாவட்ட செயலகம் ஏற்பாடு

கொழும்பு, பெப். 24

முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களமும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக தொழில் சந்தை ஒன்றை இணையச் செயலியூடாக(Zoom) நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல்துறை நிறுவனங்கள் இணைந்து வேலைவாய்ப்பை வழங்கும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப ண்பதை நோக்காகக் கொண்டதே இந்த தொழில்சந்தையாகும்.

இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மாவட்ட செயலகம், மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்கள உத்தியோகத்தர்களை 077 3482423 அல்லது 077 2718065 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்வதோடு தங்கள் வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

# கூட்டு ஒப்பந்தத்துக்காக சபையில் குரல் கொடுத்த அமைச்சர் ரமேஷ்

கொழும்பு, பெப். 24

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்னைக்கு தீர்வு காணவேண்டுமானால் முதலாளிமார் சம்மேளனமும், பெருந்தோட்டத் தொழிற் சங்கங்களும் மீண்டும் கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என அரசாங்கம் கோரியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் நடைபெற்றது. விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண இது தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவை வழங்க முயற்சி செய்தோம். ஆனால் அதற்குக் கம்பனிகள் உடன்படவில்லை. இதே வேளை நாளாந்த சம்பளமாக 800 ரூபாயையும், வருகைக்கான கொடுப்பனவாக நூறு ரூபாவும், உற்பத்தித்திறன் கொடுப்பனவாக நூறு ரூபாவும் வழங்கி, மொத்தமாக ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க பெருந்தோட்டக் கம்பனிகள் முன்வந்தன. ஆனாலும் தொழிற்சங்கங்கள் நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்ததால், அரசாங்கத்தினால் கம்பனிகளின் யோசனைக்கு இணங்க முடியாதுள்ளது.

இந்த நிலையிலே சம்பள நிர்ணயச்சபையின் ஊடாக ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீர்மானித்தார். இதனை எதிர்த்து பெருந்தோட்டக் கம்பனிகள் உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளன. பெருந்தோட்டக் கம்பனிகளும், தொழிற்சங்கங்களும் மீண்டும் கூட்டு ஒப்பந்தத்துக்குள் வரவேண்டும். இதன் மூலமே பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பள பிரச்னைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்- என்றார். (அ)

# 2015 இற்கு பின்னர் நாட்டில் மிகப்பெரும் மின் நிலையங்கள் அமைக்கப்படவில்லை

## அதுவே மின் நெருக்கடி நிலைக்கு காரணம்

கொழும்பு, பெப். 24

இலங்கையில் 2015ஆம் ஆண்டின் பின்னர் பாரிய அளவிலான மின் நிலையங்கள் அமைக்கப்படாததன் விளைவுகளுக்கு மக்கள் முகங்கொடுத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வலுசக்தி தொடர்பான பொறியியலாளர் திலக் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 1995ஆம் ஆண்டளவில் 100 சதவீதமாக காணப்பட்ட நாட்டின் புதுப்பிக்கக்கூடிய வலுசக்தித்துறையின் பங்களிப்பு தற்சமயம் பாரிய அளவில் குறைவடைந்திருக்கிறது.

2030ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கக்கூடிய வலுசக்தியின் மூலம் நாட்டின் 70 சதவீதமான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது-என்றார்.

தற்போது எரிபொருள் மற்றும் போதிய நீர்வீழ்ச்சி இன்மையால் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாடாளவிய ரீதியில் மின் விநியோக தடை ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தடைசெய்யப்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உலகத் தமிழர் பேரவை இணைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்ராலினுக்கு கடிதம் ஒன்றை கடந்த 18ஆம் திகதி எழுதின. இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடையது அல்ல என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மறுத்துள்ள நிலையிலேயே சாம். சம்பந்தனின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து கையொப்பம் வைத்து இந்தியாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினோம். அதில் 15 விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு அத்தியாவசியமாக 13ஆவது திருத்தச் சட்டத்தையும் - மாகாண சபை தேர்தலையும் உடனடியாக நடத்த வேண்டும் என்றும் கோரியிருந்தோம்.

இந்தக் கடிதம் அனுப்பப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் பங்காளிக் கட்சிகள் கூடிப் பேசினோம். உங்களுக்குத் தெரியும் அன்றைய காலத்தில் இருந்து விடுதலைப் புலிகள் அ. தி. மு. கவுடனும், ரெலோ தி. மு. கவுடனும் - உட்கட்சி அரசியலில் இருந்துதான் போராட்டத்துக்கு பல பின்னடைவுகளை கொண்டுவந்தன.

தமிழ்நாட்டின் ஆதரவு தளம் எங்களுக்குத் தேவை. நாங்கள் இங்கு எடுக்கும் சகல விடயங்களையும் பங்காளிக் கட்சிகளான 6 கட்சிகளுடனும் இணைந்துதான் விடயங்களை முன்னெடுக்க வேண்டும். இதுதான் ஜனநாயக மரபு. எங்களுக்கு தலைவர் தங்கதுரை காலத்திலிருந்து தி. மு. கவுடன் தொடர்பு இருக்கிறது. நாங்கள் ஆறு கட்சிகளும் இணைந்துதான் தமிழ்நாடு முதலமைச்சரை சந்திப்பதற்கு நேரம் கேட்டிருந்தோம்.

உள்ளூராட்சி தேர்தல் - அதன் வாக்குகள் அறிவிப்பு நடப்பதால் அதற்கு பின்னர் நேரம் தருவதாக தமிழ்நாடு முதலமைச்சர் எமக்குக் கூறியிருந்தார். இந்தச் செய்தி அவர்களுக்கு தெரியும். இந்த நிலையில், உலகத் தமிழர் பேரவை சுரேந்திரனும், சுமந்திரனும் இணைந்து இவற்றை செய்கிறார்கள். சுமந்திரன் பங்காளிக் கட்சிகளான எங்களுடன் கலந்தாலோசிக்காமல் விடயங்களை செய்கிறார். அந்த அறிக்கையிலுள்ள உலகத் தமிழர் பேரவை என்பது இலங்கையில் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பு. இலங்கையில் ஒரு மாவீரர் தினத்துக்கோ - திலீபனின் தினத்துக்கோ ஒரு படத்தை பேஸ்புக்கில் பதிவிட்டால் ரி. ஐ. டி. கைது செய்யும் நிலையுள்ளது.

இவர்கள் (சுமந்திரன் - தமிழ் அரசுக் கட்சி) தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி. ஆனால், இவர்கள் அமெரிக்கா, கனடாக போகிறார்கள் - தடை செய்யப்பட்ட அமைப்புடன் சேர்ந்து செயல்படுகிறார்கள். இணைந்து அறிக்கை விடுகிறார்கள். ஆனால், இவர்களுக்கு எதிராக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில், எதேனும் மறைமுக நிகழ்ச்சி நிரல் உள்ளதா?

13ஆம் திருத்தச் சட்டத்தை நாம் (ரெலோ) எடுத்தபோது, இதே சுமந்திரனும் உலகத் தமிழர் பேரவையும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்துக்கு வந்து, அமெரிக்கா இதைவிடப் பெரிய தீர்வுத் திட்டத்தை தரப்போகிறது. ஜனவரி 15ஆம் திகதி அறிவிக்கப் போகிறது என்றார்கள். ஆனால், இப்போது பெப்ரவரி 15ஆம் திகதியும் கடந்துவிட்டது. எதுவும் நடக்கவில்லை. ஆனால், நாம் திட்டமிட்ட கூட்டத்தை நடத்தினோம். பின்னர் அதில், அவர்களும் கலந்து கொண்டனர். சம்பந்தன் ஐயாதான் தலைமை தாங்கினார்.

தமிழ் அரசுக் கட்சி தமது கட்சியை முன்னிலைப்படுத்துகிறது. ஆனால், நாங்கள் ரெலோ கட்சி தமிழ் மக்களின் நலன்களுக்காக ஆயுதப் போராட்டத்தை நடத்திய கட்சி. நாங்கள் பாராளுமன்ற அரசியலை முன்னிலைப்படுத்துவதில்லை. ஆறு கட்சிகளின் கூட்டத்தில் சம்பந்தன் ஐயாவையே தலைவரா ஏற்றோம். எங்கள் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை முன்னிலைப்படுத்தவில்லை. இதற்கு முன்னர் திண்ணையில் நடந்தகூட்டத்தில்கூட சிறீலங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமையே முன்னிலைப்படுத்தியிருந்தோம்.

இப்போதிருக்கும் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்காக தனித்து எந்த ஒரு கட்சியாலும் தீர்வைக் கொடுக்கமுடியாது. நாம் ஒரு பொது விடயத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அவர்களின் தனித்துவ விடயங்கள் இருக்கட்டும். ஆனால், நாம் பொது விடயத்தில் இணைந்து செயல்படவே ஆறு கட்சிகளின் கூட்டை உருவாக்கினோம். தேர்தலில் தனித்துப் பயணிப்போம். அது வேறு, ஆனால், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## படைகள்...

மையார் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பை இழிவுபடுத்தக்கூடாது. விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களின் - அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் கதைகளின் ஒரு பக்கத்தை மட்டுமே நீங்கள் (மிற்செல் பச்லெட்) கேட்டிருக்கிறீர்கள். எனவேதான் எங்களுக்கு நீதி வழங்குமாறு கோருகிறோம். நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்தை இழிவுபடுத்துகிறீர்கள். நாங்கள் பயங்கரவாதத்தை ஒழித்து விட்டோம் என்று எங்கள் மீது நீங்கள் கோபமாக இருக்கிறீர்களா என்று உங்களை கேட்க விரும்புகிறேன்",

"விடுதலைப் புலிகள் ஒரு கொடிய பயங்கரவாத அமைப்பு. அவர்கள் அப்பாவி மக்களை கொன்று குவித்தார்கள். ஒருமுறை இந்தியப் பிரதமரையும் கொன்றார்கள். அரிசயல்வாதிகளை கொல்ல தற்கொலை படைகளை பயன்படுத்தினார்கள். தமிழ் அரசியல் தலைவர்களையும் கொன்றார்கள். தாய்மார்கள் குழந்தைகளையும் இரக்கமின்றி வெட்டிக் கொன்றார்கள்."

"2010ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிடவும் எனக்கு அதிக வாக்குகளை வழங்கியதால், படைத் தரப்பினர் தம்மை துன்புறுத்தினார்கள் என்பதை வடக்கிலுள்ள மக்கள் நம்பவில்லை என்பது தெளிவாகிறது. எது எப்படி இருப்பினும், ஒன்று அல்லது இரு உறுப்பினர்கள் செய்த குற்றங்களுக்காக ஒட்டுமொத்த படையினரும் பாதிக்கப்படக்கூடாது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக போராடி வரும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு ஆதரிக்கிறேன்", என்றார். (ஐ)

## ஈஸ்டர்...

தடுத்திருக்கலாம்.

இந்நிலையில் தற்போது இது தொடர்பாக எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேநேரம் தாக்குதல் தொடர்பாக ஒருவர் மீது வழக்கு தாக்கல் செய்வது விடுதலை செய்வது உள்ளிட்டவை தொடர்பாக சட்டமா அதிபரே தீர்மானிக்கின்றார் - என்றார். (அ)

## கொரோனாவுக்கு...

ஆறு பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 10 ஆண்களும் 15 பெண்களுமாக 25 பேரும் என 31 பேர் உயிரிழந்தனர்.

இதனால் நாட்டில் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 86 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி யாரென தெரிந்தால் கூறுங்கள்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கேட்கிறார்

கொழும்பு, பெப். 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக நௌபர் மௌலவியையே கருதுகிறார் என்றும் இவருக்கு மேலதிகமாக பிரதான சூத்திரதாரி தொடர்பில் எவருக்கேனும் தகவல் தெரியுமாக இருந்தால் அதுபற்றி தெரிவிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அரசாங்கமும், பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், விசாரணை நடவடிக்கைகளில் அரசாங்கம் மந்தகதியில் செயல்படுகின்றது என்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் மிகவும் அநியாயமானது.

இதனால் அந்தக் குற்றச்சாட்டுகளை நாங்கள் நிராகரிக்கின்றோம். அத்துடன், இந்தத் தாக்குதல் தொடர்பாக குரலெழுப்பும் நபர்களை ஒடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதுவும் உண்மைக்கு புறம்பானது - என்றார். (ஐ)



## அரசியல்...

பித்துள்ளனர்.

கரும்புலிகள் தினத்தை நினைவு கூர முயன்றனர் , தீய செயல்களை ஏற்படுத்தும் பொருட்டு வெடிபொருள் தயாரிப்புக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டுக்களில் கடந்த 2020.07.03, 06 மற்றும் 2021.5.28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த மூவரின் போராட்டத்துக்கும் ஆதராவாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் நேற்று காலை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். (ஐ)

## கொரோனாவால்...

களால் பாதிக்கப்படுகின்றனர். இதில், பிரதானமானது இதய நோய் ஆகும். சாதாரண நெஞ்சுவலி ஏற்படும் அது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆனால், நெஞ்சு வலி ஏற்பட்டமைக்கான காரணம் என்ன என்பதை அறிந்து கொள்வது அத்தியாவசியமானதாகும்.

இதனை தவிர நுரையீரல் பாதிப்பு, கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளாகி 3 - 6 மாதங்களுக்கு மணம் மற்றும் சுவையை உணர முடியாமை, நரம்பு பிரச்னை, இரத்தம் உறைதலால் உடல் உறுப்புக்கள் செயலிழத்தல், ஞாபக மறதி, தூங்கும் நேரம் அதிகரித்தல் அல்லது குறைவடைதல், மன உளைச்சல், உடல் மற்றும் தசை வலி உள்ளிட்ட நோய் நிலைமைகளும் கோவிட் - 19 தொற்றின் பின்னர் ஏற்படக்கூடும்.

இவ்வாறான நோய் நிலைமைகளை அறிவித்து தற்போது கோவிட் சிகிச்சை நிலையங்களில் கோவிட் தொற்றுக்கு பின்னரான நோய் நிலைமைகளுக்கான விசேட சிகிச்சை வழங்குவது தொடர்பான செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே, இதுபோன்ற அறிகுறிகள் எவையேனும் தென்பட்டால் அவற்றை உதாசீனப்படுத்த வேண்டாம் - என்றார். (ஐ)

## இன்றும்...

மையால் இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த மின்வெட்டுக்கு அனுமதியளித்துள்ளது.

நாடு முழுவதும் 11 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு இரு கட்டங்களாக மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன்படி, ஏ, பி, சி ஆகிய பகுதிகளில் 4 மணி 40 நிமிடங்கள் மின்வெட்டு அமுலாகும். ஏனைய வலயங்களில் 4 மணி 30 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். (ஐ)

## இலங்கையில்...

கடியை குறைக்க இந்தியா - இலங்கை இடையே பல பேச்சுக்கள் நடந்தன. அந்நியச் செலாவணியை வழங்குவதோடு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கும் இந்தியா கடன் வரியை நீட்டித்தது. இலங்கையில் கடுமையான அந்நியச் செலாவணி தட்டுப்பாடு ஏற்பட்டு, எரிபொருள் இறக்குமதிக்கு பணம் செலுத்த முடியாமல் கடந்த சில நாட்களாக பரவலாக மின்வெட்டு ஏற்பட்டுள்ளது - என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

பிறப்பு
15 - 07 - 1936



இறப்பு
20 - 02 - 2022

## பரமு சிவலிங்கம்

யாழ். புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், புளூனை பொட்சுவானாவை வசிப்பிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பரமு சிவலிங்கம் அவர்கள் 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு – தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற நாகலிங்கம் – இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணி அவர்களின் அன்புக் கணவரும், உதயசங்கர் (கனடா), உதயசந்திரன் (பிரித்தானியா), வதனி (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வி, கவிதா, சிறீகணேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணன், லக்சுமன், செந்தூரன், கபிலன், கார்த்திக், அபிராமி ஆகியோரின் பாசமிகு பாட்டனும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கிருட்ணபிள்ளை மற்றும் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, கணபதிப்பிள்ளை, நடராசா மற்றும் கமலாதேவி, கமலாம்பிகை, நவரத்தினராசா ஆகியோரின் மைத்துனரும், இளங்கோ, பொன்மகள், இளவழகன், இளஞ்சேரன், இளஞ்சென்னி, இளம்வழுதி, இளவரசன், செந்தாமரை, மணிவண்ணணண், பொற்செல்வி, பரந்தாமன், துளசி, சாரங்கன், தனலட்சுமி, ரவீந்திரன், சிவகுமார், பஞ்சலிங்கம், ராமகிருஷ்ணன், விஜயலட்சுமி, காந்தரூபன், மனோகரன், கல்யாணி, பிரபாகரன், கவிதா, வனிதா, முகுந்தன், வான்மதி, தனரூபன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 26 Feb 2022 6:00 PM - 9:00 PM
Sunday, 27 Feb 2022 1:30 PM - 2:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Sunday, 27 Feb 2022 2:00 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Sunday, 27 Feb 2022 4:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
உதயசங்கர் - மகன்
Mobile : +14163019274

தகவல்:
குடும்பத்தினர்

# 3ஆவது தடுப்பூசி வழங்கும் பணி வவுனியா மாவட்டத்தில் தாமதம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 24

**கோவிட் பெருந்தொற்றில் இருந்து விடுபடுவதற்காக தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் துரிதகெதியில் இடம்பெற்று வருகின்ற போதிலும் வவுனியா மாவட்டத்தில் சுகாதார தரப்பினால் மூன்றாவது தடுப்பூசி வழங்கும் பணி தாமதமடைவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வவுனியா பிராந்திய சுகாதார பணிப்பாளருக்கு கண்டிப்புடனான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

19.02.2022 ஆம் திகதி வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில்,

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மூன்றாம் கட்ட தடுப்பூசி சனத்தொகை அடிப்படையில் 29.6 வீதமாகவே

காணப்படும் நிலையில் இவ் அடைவு மட்டம் 70 வீதமாக காணப்பட்டிருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான அடைவு மட்டமானது எதிர்மறையான விளைவுகளை மாவட்டத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கே ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, தடுப்பூசி குறைந்த அளவில் வழங்கப்பட்டமைக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரே காரணம் என குறிப்பிட்டுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஜூலை மாதத்துக்குள் தடுப்பூசி பெற்றவர்களின் அடைவு மட்டம் அதிகரிக்காதுவிடின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள்

பணிப்பாளர் ஆகியோர் கணக்காய்வாளர் விசாரணைக்கு பதிலளிக்க வேண்டியேற்படும் எனவும் தடுப்பூசி வழங்கலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனிப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதிக்கு முன்பதாக வவுனியா மாவட்டத்தில் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 45 வீதமாக அதிகரிக்கப்பட்டிருக்கவேண்டும்

என்பதுடன் தொடர்ச்சியாக வாராந்தம் 10 வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அந்த கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# 30 வயதுக்குட்பட்டவர்களின் சாவுக்கு கொரோனா பிரதான காரணம் அல்ல

## ஹேமந்த ஹேரத் கூறுகிறார்

கொழும்பு, பெப். 24

கொரோனா தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உயிரிழக்கும் 30 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்துக்கு கொரோனா தொற்று பிரதான காரணம் அல்ல என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உயிரிழந்தவர்களில் பலர் சிறுவயது முதலே நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு மரணிப்பவர்களுக்கு சிறுநீரக நோய் மற்றும் நரம்பு மண்டலம் சார்ந்த நோய்கள் மரணத்துக்கான பிரதான காரணங்களாக அமைந்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# என் அமைதியை தவறாக பயன்படுத்திவிட்டார்கள்!

## நிமல் லான்ஸா சபையில் விசேட உரை

கொழும்பு, பெப். 24

எனது அமைச்சில் இடம்பெற்ற பிரச்னைகள் தொடர்பில் தேவையில்லாத வாதம் அவசியமில்லை என்று கருதியே நான் அமைதியாக இருந்தேன். ஆனால், எனது அமைதியை தவறாக பயன்படுத்திக்கொண்டு ஆளும் தரப்பு உறுப்பினர்களே எனக்கு எதிரான கருத்துகளை முன்வைத்தனர் என இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த சில தினங்களில் எனது அமைச்சில் இடம்பெற்ற சம்பவமொன்று தொடர்பில் அனைவருக்கும் விளக்கமளிக்க வேண்டியது எனது பொறுப்பாகும். எனக்கு ஏற்பட்ட பிரச்னைகள் தொடர்பில் நான்கு காரணங்களின் அடிப்படையில் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை சமர்ப்பித் துள்ளேன். அது தொடர்பில், சுயாதீனமான விரைவாக விசாரணைகளை ஜனாதிபதி முன்னெடுப்பார் என நான் எதிர்பார்க்கிறேன்.

எனது பிரச்னைகளை பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினாலும் இங்குள்ள யாராலும் அவற்றுக்கு தீர்வு வழங்க முடியாது. ஜனாதிபதியால் மாத்திரமே எனது பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும்.

அந்தச் சம்பவத்தின் பின்னர் நான் எந்தவொரு இடத்திலும் எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை. அமைதியாகவே இருந்தேன். பொருளாதாரம் தொடர்பில் எமது நாட்டில் பாரிய பிரச்னை இருக்கிறது. வாழ்வாதாரத்தை முன்னெடுக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது. அவ்வாறு இருக்கையில் தனிப்பட்ட பிரச்னைகளை பெரிதுப்படுத்துகிறார்கள்.

ஆனால், எனது பிரச்னை தனிப்பட்ட பிரச்னை கிடையாது. அது மக்களின் பிரச்னை. இருந்தபோதிலும் அதனை பெரிதுப்படுத்தாமல் சரி செய்யவே நான் எண்ணினேன். அந்த பிரச்னையை பெரிதுப்படுத்திக்கொள்ள வேண்டாம், அமைதியாக இருக்குமாறு மக்கள் எனக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

அதன் காரணமாகவே நான் அமைதியாக இருந்தேன். எங்களின் தரப்பிலுள்ள ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் எனக்கு எதிரான கருத்துகளை முன்வைத்தார்கள். அதற்கு பதிலடியை என்னால் வழங்க முடியும். ஆனால், பதலடி வழங்கவேண்டாம் என மக்கள் என்னை வழியுறுத்தினார்கள்.

எனக்கு எதிராக செயற்பட்ட நபர் தொடர்பில் சமூகத்தில் ஒரு நிலைப்பாடு இருக்கிறது. உயிர்வாழ ஒட்சிசன் தேவையில்லை என்று கூறியவருடன் தர்க்கத்துக்குச் செல்லவோ, கருத்து பறிமாற்றம் செய்யவோ அல்லது பதலடிக் கொடுக்கவோ வேண்டாம் என்றே எனக்கு வாக்களித்த மக்கள் தெரிவித்தார்கள். அதனால்தான், ஒரு அடி பின்வாங்கி அமைதியாக இருந்து அவதானித்துக் கொண்டிருந்தேன்.

இன்று வேண்டுமானாலும் எனக்கு பதலடி வழங்க முடியும். ஆனால், அதனை செய்ய போவதில்லை. நாடு என்ற அடிப்படையில் பாரிய நெருக்கடியில் இருக்கிறோம். நாம் எதிர்க்கட்சியை குற்றஞ்சர்டடுவதாலோ அல்லது எதிர்க் கட்சி எம்மை குற்றஞ்சாட்டுவதாலோ எந்த தீர்வும் கிடைக்கப் போவதில்லை. எனவே நாட்டிலுள்ள பிரச்னைகளே தற்போது அவசியம்-என்றார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.20 மணி : சித்த மருத்துவம் தோல் தொற்றிலிருந்து எவ்வாறு குணமாவது வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு


**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- நினைத்தாலே இனிக்கும், வேதாளம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை கொம்புவச்ச சிங்கம்டா திரைவிமர்சனம்



**இரவு**

7.00 மணி : சமையல் சமையல் (எள்ளுசாதம், மா இஞ்சித்தொக்கு,நெய் அப்பம் சமைக்க ஆரம்பிக்கலாம்)
7.30 மணி : வெள்ளிடை நுட்பம் - தொழில் நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம் பாடல்களுக்கான சமர்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு